# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண் –46

# தமிழ் வளர்ச்சி

## 2022 - 2023


**தங்கம் தென்னரசு**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப் பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# தமிழ் வளர்ச்சித் துறை

2022 – 2023

## பொருளடக்கம்


| தொ. எண் | பொருண்மை | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1–5 |
| 1. | தமிழ் வளர்ச்சித் துறை | 6–38 |
| 2. | மொழிபெயர்ப்புத் துறை | 39–46 |
| 3. | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம் | 47–62 |
| 4. | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 63–79 |
| 5. | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 80–91 |
| 6. | உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை | 92–101 |
| 7. | செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் | 102–110 |
| 8. | தமிழ் வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் | 111–112 |
| | நிறைவுரை | 113 |
| | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு | 114 |

# தமிழ் வளர்ச்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2022–2023

## முன்னுரை

உலகத் தோற்றமும் உலகத்தில் தோன்றிய உயிர்களின் பரிணாம வளர்ச்சியும் வரையறுத்துக் கூறுவதற்கு இயலாதனவாக உள்ளதைப் போலவே, மொழிகளின் தோற்றமும் அதன் பரிணாம வளர்ச்சிகளும் வரையறுத்து உணர்தற்கு அரியனவாய் உள்ளன. எல்லா உயிர்களும் தோன்றி மறைவதைப் போன்றே எல்லா மொழிகளும் தோன்றி மறையும் இயல்பினை உடையன எனும் பொதுப் பண்பிற்கு விதிவிலக்காய் அமைந்த மொழி தமிழ்மொழி.

இந்நிலவுலகில் மனித இனம் தோன்றிய இடமாகக் கருதப்படும் குமரிக்கண்டமே தமிழ்மொழியும் தோன்றிய நிலப்பகுதியாக அறியப்படுகிறது. இந்தியாவின் தென்பகுதியாகிய குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழ்மொழி, இந்திய நிலப்பகுதி மற்றும் இந்திய நிலப்பரப்பைக் கடந்து உலகெங்கும் பேசப்படும் மொழியாக உள்ளது.

---

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால். குறள் **14**

தமிழ் மொழி கருத்துப் பரிமாற்ற ஊடகம் என்ற அடிப்படைப் பண்பைக் கடந்து, ஓர் இனத்தின் வளர்ந்த செழிப்புற்ற ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் திகழ்கிறது.

தமிழ்மொழி, மனித இனம் தோன்றிய காலம் முதலாகத் தோன்றி, மனிதகுல வரலாற்று பதிவுகளின் ஆவணமாக உள்ளது. தமிழ்மொழிக் கருத்தியல், தனித்த ஓர் இனத்திற்கான கருத்தியலாக இல்லாமல், உலகத்திலுள்ள அனைத்து இனத்திற்குமான கருத்தியலாக விளங்குவதால், தமிழ்மொழியைக் காப்பதில் தமிழர்களுடன் உலகத்து அறிஞர்களும் கைகோர்த்து நிற்கின்றனர்.

சேர, சோழ, பாண்டியர் எனும் தமிழ்வேந்தர் மூவர் ஆண்டுவந்த நிலப்பரப்பை, அயல்நாட்டார் ஆளத் தொடங்கிய காலம் முதலாகத் தமிழ்மொழி, பிறமொழித் தாக்குதல்களுக்கு உட்பட்டது. எனினும் அயல்மொழிகளைத் தன்னுள் அடக்கிய தமிழ், தனித்தமிழாய் வளர்ந்து செழிப்புற்றதை வரலாறு உணர்த்துகிறது.

காலத்தால் அழியாச் சிறப்பு பெற்றுள்ள தமிழ்மொழி, காலத்தின் வளர்ச்சிக்கும் அறிவியல் தொழில்நுட்ப மாற்றங்களுக்கும் ஏற்ப தன்னை தகவமைத்துக்கொண்டு பன்மைத்துவம் கொண்ட, தனித்தமிழாகவே வளர்ந்துவருகிறது.

---

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. குறள் **15**

தமிழை, அதன் மொழிவளத்தால், பண்டைத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் முதலிய வகையினவாகவும் அதன் பொருண்மைச் செறிவால் சங்கத் தமிழ், தெய்வத் தமிழ், நவீனத் தமிழ் முதலியனவாகவும் குறிப்பிடுகின்றனர்.

உலகத்து உயிர்களுக்கு அன்பைக் கற்றுத் தரும் தமிழை ஞானத் தமிழ் என்று குறிப்பிடுகிறார் பூதத்தாழ்வார். எல்லாப் பொருண்மைகளையும் தன்னுள் கொண்டு, புதுமைத் தமிழாய் வளர்ந்துவரும் தமிழ்மொழியை, வளர்மொழி என்று குறிப்பிடும் பாரதி, "வானம் அறிந்ததனைத்தும் அறிந்து வளர்மொழி வாழியவே" என்று பாடுகிறார்.

இயற்கையியல் கோட்பாடுகளையும் சூழலியல் அறங்களையும் வகுத்துக்கொண்டு நெறிசார் வாழ்வை வாழ்ந்த அறிவுசார் மரபினராகத் தமிழரும் அவர்தம் படைப்புகளும் உலகப் புகழ்பெற்றுள்ளன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறம் 192:1) என்று உலகப் பொதுமை உரைத்த முதல் மொழி தமிழ்மொழி.

முதல்நாள் நடந்த போரில் தந்தை யானைகளைக் கொன்று தானும் இறக்க, நேற்று நடந்த போரில் பசுக்கூட்டங்களைக்காத்துக்கணவன் இறக்க,இன்றும் போர்ப்பறை கேட்ட வீரத் தமிழ்த்தாய்,தன் ஒரு மகனைப் போர்க்களத்திற்கு அனுப்புவதை, ஒக்கூர் மாசாத்தியார், "ஒரு மகன் அல்லது இல்லோள் செருமுகம் நோக்கிச்

---

விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது. குறள் **16**

செல்க என விடுமே" (புறம்.279:10–11) என்று பாடுகிறார். இவ்வாறான தமிழிலக்கியப் பாடல்களால் தமிழ் நிலம், பண்பாட்டுடன் வீரம் விளையும் நிலமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.

தமிழைப் பாடிய புலவோர் தமிழால் தகுதிபெற்றதையும் தமிழ்ப் புலவர்களால் தமிழ் நிலைபெற்றதையும் தொல்காப்பியம் முதலிய மரபிலக்கணங்களும், சங்க இலக்கியம் முதலிய தமிழ் இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து ஓங்குபெரும் செந்நெல் ஊடு கயல் உகள, பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைப்பற்றி வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள், நீங்காத செல்வம் நிறைந்த செழுமையான தமிழ் மண்ணில் விளைந்த சிந்தனைகளும் செழுமையானவையாகவே அமைந்தன.

தமிழ் எழுத்துகளுக்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு என்பதைத் தொல்காப்பிய ஆய்வுகளும் தொல்லியல் ஆய்வுகளும் எடுத்துரைக்கின்றன. காற்றின் திசையறிந்து கலம் செலுத்திய பண்டைத் தமிழர் சுமார் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு

---

முன்பே கடல்கடந்து வணிகம் செய்தனர். தாய்லாந்து, கோலங் தோம் அருங்காட்சியகத்தில் உள்ள பொன் உரசும் கல்லில் "பெரும்பதன் கல்" என்ற பழந்தமிழ் எழுத்துப் பொறிப்பு உள்ளது. இதன்வழி, பழந்தமிழர்கள் கீழை நாடுகளுக்கு மேற்கொண்ட கடல்வழிப் பயணங்களை உறுதிப்படுத்த முடிகிறது.

பண்பாட்டு பரவல்களை, வாழ்வியல் விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட தமிழ்மொழி சமூகக் கட்டமைப்பு, குடும்ப ஒழுங்கமைவு, உறவுப் பின்னல்கள், தனிமனித ஒழுகலாறுகள் என வாழ்வியல் கூறுகளை ஒருமித்த நோக்கில் எடுத்துரைத்த மொழியாகும்.

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற பாரதியின் வாக்கிற்கு ஏற்ப, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலையில் தமிழை வளர்ப்போம் தமிழ்வழியே, இவ்வுலகத்து உயிரை வளர்ப்போம்.

---

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. குறள் **18**

## இயல் - 1
## தமிழ் வளர்ச்சித் துறை

### 1. ஆட்சிமொழிச் செயலாக்கம்

#### 1.1 ஆய்வு

தமிழ்நாடு அரசின் ஆட்சிமொழிச் சட்டத்திற்கிணங்க அரசின் நிருவாக மொழியாகத் தமிழ்மொழி இருந்து வருகிறது. ஆட்சிமொழிச் சட்டத்தின் அடிப்படையில் பிறப்பிக்கப்பெற்றுள்ள அரசாணைகளின்படி, அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் நிருவாக அலுவல்களில் முழுமையாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்திடும் நோக்கில் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

தமிழ் வளர்ச்சித் துறையின் தலையாய பணியான தமிழாய்வுப் பணியினை மேன்மையுறச் செய்திடத் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களால் தலைமைச் செயலகத் துறைகளிலும், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் துறைத் தலைமை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், அரசு நிறுவனங்கள், மாவட்டாட்சியர் அலுவலகங்கள்

---

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின். குறள் **19**

ஆகியவற்றிலும் இத்திட்டம் தொடர்பான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் ஆகியோர் மாவட்ட நிலை மற்றும் சார்நிலை அலுவலகங்களில் இவ்வாய்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 1.2 ஆட்சிமொழிப் பயிலரங்குகள்

அரசு நிருவாகத்தில் பொதுமக்களுக்காகச் செயற்படும் அரசு ஊழியர்கள், அரசின் நிருவாக மொழியான தமிழ்மொழியில் சிறப்புறச் செயலாற்றிட ஆட்சிமொழிச் சட்டம், வரலாறு, மொழிப் பயிற்சி, அலுவலகக் குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க அரசாணைகள், ஆய்வும் குறைகளைவு நடவடிக்கைகளும், மொழிபெயர்ப்பு கலைச்சொல்லாக்கம் ஆகிய தலைப்புகளில் மின்காட்சியுரைமூலம்வகுப்புகள்நடத்தப்பெறுகின்றன. அனைத்துமாவட்டங்களிலும் பயிலரங்கம்நடத்தப்பெற மாவட்டத்திற்கு ரூ.50,000/- வீதம் ஆண்டுதோறும் நிதி வழங்கப்பெறுகின்றது. இப்பயிலரங்கம் கடந்த நிதியாண்டில் 38 மாவட்டங்களிலும் நடத்தப்பெற்றன.

---

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. குறள் **20**

## 1.3 ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

ஆட்சிமொழிப் பயிலரங்குகள் நடத்தி முடிக்கப்பெற்றதன் தொடர்ச்சியாக ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நடத்தப் பெறுகிறது. இக்கருத்தரங்கில் மாவட்ட ஆட்சியர், தமிழ் வளர்ச்சி இயக்குநர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தமிழறிஞர்கள் பங்கேற்றுத் தமிழ்மொழியின் சிறப்புகளையும் அலுவலக நிருவாகத்தில் தமிழ் அவசியம் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் தமிழின் பெருமையையும் எடுத்துக்கூறி கருத்தரங்கைச் சிறப்பிக்கின்றனர். ஆட்சிமொழிப் பயிலரங்கில் பங்கேற்ற அரசுப் பணியாளர்கள் அனைவரும் இக்கருத்தரங்கிலும் பங்கேற்று மேலும் தங்களைச் செம்மைப்படுத்திக் கொள்கின்றனர்.

## 1.4 ஆட்சிமொழிச் சட்ட வாரம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அந்தந்த மாநிலங்களின் மக்கள் பெரும்பான்மையாகப் பேசும் மொழியிலேயே ஆட்சி நடத்திக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வகையில் தமிழ்நாடு அரசின் ஆட்சிமொழி தமிழ் என சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956–ஆம் நாளைப்

---

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. குறள் **22**

போற்றிடும்வகையில் ஆட்சிமொழிச் சட்ட வாரம் அனைத்து மாவட்டங்களிலும் ஒரு வாரகாலம் கடைபிடிக்கப்படுகிறது. இந்நேர்வில் ஆட்சிமொழிச் சட்டத்தைப் பொதுமக்கள், வணிகர்கள் அறிந்திடும் வகையில் விழிப்புணர்வுப் பேரணிகளும், வணிகச் சங்க நிர்வாகிகளுடன் பெயர் பலகைகள் தமிழில் வைத்திட வலியுறுத்திக் கலந்துரையாடல் கூட்டம் நடத்துதல், அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டப் பயிற்சியும், விழிப்புணர்வும் ஏற்படுத்தும் வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. மேலும் மாணவர்களிடையே ஆட்சிமொழிச் சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பட்டிமன்றம் நடத்தப்படுகிறது.

## 1.5 சென்னை மாவட்ட அரசுப்பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி

சென்னை மாவட்டத்தில் அனைத்துத் துறைகளின் தலைமை அலுவலகங்கள் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதைக் கருத்தில் கொண்டு ஆட்சிமொழித் திட்டப் பயிற்சி வகுப்புகள் 5 அணிகளாக நடத்தப் பெறுகிறது. இப்பயிற்சி வகுப்பில் ஆட்சிமொழிப் பயிலரங்கில் நடத்தப்படுவதைப்

---

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. குறள் **23**

போன்றே அனைத்துப் பொருண்மைகளிலும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன.

## 1.6 சிறந்த குறிப்புகள், வரைவுகளுக்குப் பரிசுகள்

அரசின் அனைத்துச் செயற்பாடுகளும் முழுமையாகத் தமிழில் இருக்க வேண்டும் என்பதற்காக (அலுவலகக் கோப்புகளில்) குறிப்புகள், வரைவுகள் தொடர்ந்து தமிழில் எழுதும் அரசுப் பணியாளர்களைத் தெரிவு செய்து மாவட்ட நிலை, உள்ளாட்சி நிலை, தன்னாட்சி நிலை, சார்நிலை ஆகிய வகைப்பாடுகளில் சிறந்து விளங்கும் பணியாளர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3,000/–, இரண்டாம் பரிசாக ரூ.2,000/–, மூன்றாம் பரிசாக ரூ.1,000/– எனப் பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பெறுகின்றன.

## 1.7 தமிழில் சிறப்பாகச் செயல்படும் அரசு அலுவலகங்களுக்குக் கேடயம்

ஆட்சிமொழிச் சட்டத்தின் அடிப்படையில் அரசு அலுவலகங்களில் அலுவலகச் செயற்பாடுகள் முழுமையாக தமிழில் நடத்திவரும் அலுவலகங்களில் தலைமைச்செயலக அலுவலகம், துறைத் தலைமை அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

---

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. குறள் **24**

வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் துறைத் தலைமை அலுவலகங்கள் என்ற வகைப்பாட்டின்கீழ் தெரிவுசெய்து ஒவ்வொரு ஆண்டும் கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறுகின்றன.

## 2. விழாக்கள்

### 2.1 திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவரின் பெருமையினை உலகறியச் செய்யும் வகையில் ஆண்டுதோறும் தைத் திங்கள் 2ஆம் நாள் திருவள்ளுவர் திருநாளாகத் தமிழ்நாடு அரசு சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. அவ்வகையில் 15.01.2022ஆம் நாளன்று வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

### 2.2 உலகத் தாய்மொழி நாள்

ஐக்கிய நாட்டுக் கல்வி மற்றும் கலைப் பண்பாட்டு அவையின் சார்பில் பிப்ரவரித் திங்கள் 21ஆம் நாளை உலகத் தாய்மொழி நாளாகக் கடைப்பிடிக்க அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசால் உலகத் தாய்மொழி நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

---

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி. குறள் **25**

### 2.3 தமிழ்க் கவிஞர் நாள்

"தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை" என முழங்கிய புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் நாளைப் போற்றும் வகையில் தமிழ்க் கவிஞர் நாளாக, தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் புரட்சிக் கவிஞரின் புகழினைப் பாரறியச் செய்திடும் வண்ணம் தமிழறிஞர்களைக் கொண்டு கவியரங்கம், கருத்தரங்கம் உள்ளிட்ட நிகழ்வுகள் நடத்தப்பெறுகின்றன.

## 3. விருதுகள்

### 3.1 வழங்கப்பட்ட விருதுகள் (2020, 2021, 2022)

தமிழ்மொழியின் சீர்மையைப் போற்றும் வண்ணம் பாடுபட்டுவரும் தமிழ் அமைப்புகளுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விருதாளர்களுக்கான விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தி வழங்க அறிவிக்கப்பட்டது. மேலும் 15.03.2022ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும்

---

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. குறள் **27**

விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2022ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது, 2021ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, தமிழ்த்தாய் விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, உமறுப்புலவர் விருது, ஜி. யு.போப் விருது,இளங்கோவடிகள் விருது,சிங்காரவேலர் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது, மறைமலையடிகளார் விருது, அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது, சி.பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது மற்றும் 2020ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது ஆகிய விருதுகள் விருதாளர்களுக்கு வழங்கப்பட்டன.

## 3.2 புதிய விருதுகள்

### 3.2.1 இலக்கிய மாமணி விருது (2021 முதல்)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97 ஆவது பிறந்தநாளை முன்னிட்டுத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச்சிறப்பிக்கும்வகையில்இலக்கியமாமணி விருது உருவாக்கப்பட்டுத் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் மூன்று பேருக்கு

---

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். குறள் **28**

ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பெற்றது. மேலும், இவ்விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக ரூ.5.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம், மற்றும் தகுதியுரையும் வழங்கப்பெறும்.

### 3.2.2 பாரதி நினைவு நூற்றாண்டு விருது

பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமையைப் போற்றும் வகையில் மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவர்களில்முக்கியபங்காற்றியபாரதிஆய்வாளர்களான மறைந்த பெ.தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு. சி.ரகுநாதன், இளசைமணியன் ஆகியோர்களின் நினைவாக அவர்தம் குடும்பத்தாருக்கும் மற்றும் மூத்த ஆய்வாளர் திரு.சீனி.விசுவநாதன் அவர்களுக்கும் பேராசிரியர் ய.மணிகண்டன் அவர்களுக்கும் தலா மூன்று இலட்சம் ரூபாயும், விருதும், மற்றும் பாராட்டுச் சான்றிதழும் 10.12.2021–ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப்பெற்றது.

---

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. குறள் **29**

### 3.2.3 கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது (2021 முதல்)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. யின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டுக் கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

## 4. புதிய திட்டங்கள்

### 4.1 திராவிடக் களஞ்சியம்

சங்க இலக்கியநூல்களைச் சந்திபிரித்துஉரையுடன் தொகுப்பு நூலாகவும் திராவிடக் களஞ்சியம் எனும் தொகுப்பு நூலையும் உருவாக்கிட ரூபாய் 10 இலட்சம் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு வழங்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. உருவாக்கப்படும் இந்நூல்களை அச்சிட்டு வெளியிட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

---

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். குறள் **30**

## 4.2 கனவு இல்லம்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 97வது பிறந்த நாளை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கனவு இல்லத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்ட பயனாளர்கள் சாகித்திய அகாடமி விருது, ஞானபீட விருது பெறும் தமிழ் எழுத்தாளர்கள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வாயிலாக வழங்கப்படும் தொல்காப்பியர் விருது, கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது மற்றும் உலக அளவிலான நோபல் பரிசு (தமிழ் இலக்கியத்திற்கு) ஆகிய விருதுகளைப் பெற்ற, பெறும் தமிழ் எழுத்தாளர்களுக்குத் தமிழ்நாட்டிற்குள் வீடு வழங்கப்படும். அவ்வகையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில்உயர்வருவாய்ப் பிரிவு இல்லம் ஒதுக்கப்படும் அல்லது அவர்கள் விரும்பும் மாவட்டத்தில் 5 சென்ட் காலிமனையில்1500சதுர அடியில்வீடு கட்டித்தரப்படும். இத்திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசுகளில் பணியாற்றும்பணியாளர்கள்மற்றும்ஓய்வூதியதாரர்களும் பயன்பெறலாம். விருதாளர் ஏற்கனவே வீடு வைத்திருந்தாலும் கனவு இல்லம் திட்டத்தின் கீழும் விண்ணப்பித்துப் பயன்பெறலாம். ஒவ்வொரு நிதியாண்டிலும் அதிகபட்சமாக 10 விருதாளர்களுக்கு

---

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. குறள் **32**

வீடுகள் வழங்கப்படும். இவ்வறிவிப்பிற்கிணங்க விருது பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

## 4.3 தீராக் காதல் திருக்குறள்

"தீராக் காதல் திருக்குறள்" என்ற பெயரில் ஊடகங்கள் வாயிலாகத் திருக்குறள் இன்றைய தலைமுறையினரைச் சென்றடையும் வகையில் தொலைக்காட்சிகளுடன் இணைந்தும் இணைய வடிவிலும் அசைவூட்டும் படங்கள், வினாடி வினா, குறும்படங்கள், நடனம் போன்ற கலை வடிவங்களோடு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## 4.4 தமிழ் பரப்புரைக் கழகம்

அயல்நாடு மற்றும் வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க 'தமிழ் இணையக் கல்விக் கழகம்' வாயிலாக ரூபாய் 1 கோடி மதிப்பில் திட்டம் உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அகரம் முதல் சிகரம் வரை எனப் பல படிநிலைகளாகப் பாடங்கள் கற்பிக்கப்பட்டு தேர்வுகள் நடத்தி சான்றிதழ் வழங்கப்பெறும்.

---

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. குறள் **34**

## 4.5 சங்க இலக்கிய நூல்களிலுள்ள வாழ்வியல் தத்துவங்களை எழிலேடாக (காஃபி மேசைப் புத்தகமாக) வெளியிடுதல்

சங்க இலக்கிய நூல்களில் உள்ள வாழ்வியல் தத்துவங்கள், கருத்துக்களை ஓவியங்களாக வரைந்து அவற்றைப் பல வண்ணங்களில் எழிலேடாக (காஃபி மேசைப் புத்தகங்களாக) வெளியிட ரூபாய் 15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனைச் செயற்படுத்தும் வகையிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் அரசு கவின் கலைக்கல்லூரி மாணவர்களிடம் ஓவியங்கள் வரைந்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4.6 இலக்கியக் கூட்டங்கள் நடத்துதல்

புகழ் பெற்ற தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் பிறந்த நாளன்று அவர்களின் தமிழ் இலக்கியப் பணி, தமிழ்த் தொண்டு, தமிழ்மொழிக்கான பங்களிப்பு ஆகியவற்றை நினைவு கூரும் வகையில் ஒரு திங்களுக்கு ஓர் இலக்கியக் கூட்டம் என்ற வகையில் உள்ளூர் இலக்கிய அமைப்புகள் மூலம் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் 12 இலக்கியக் கூட்டங்கள், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப்

---

அன்றறிவாம் என்னாது அறஞ்செய் கமற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. குறள் **36**

பேச்சுப் போட்டிகள் நடத்திட ரூபாய் 15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்க நிருவாக அனுமதியும், 2021-2022ஆம் நிதியாண்டில்மூன்றுதிங்கள்களுக்கு இலக்கியக் கூட்டங்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திடவும் ஆணையிடப்பட்டது. ஒரு இலக்கியக் கூட்டத்திற்கு ரூபாய் 1.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதன்படி திருச்சிராப்பள்ளி,திருநெல்வேலி,சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி முடிக்கப்பட்டன. மேலும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதற்பரிசாக ரூ.5,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/-மும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/-மும் வழங்கப்பட்டன.

## 5. தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவிச் சிறப்பு செய்தல்

தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் தெய்வப்புலவர் திருவள்ளுவர், தமிழ்த்தாத்தா உ.வே. சா, தமிழ் மூதாட்டி ஔவையார், கவிச்சக்கரவர்த்தி கம்பர், காவியக் காவலர் இளங்கோவடிகள், தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல், தனித்தமிழ் இயக்கத்தின்

---

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. குறள் **37**

தந்தை மறைமலையடிகள் மற்றும் தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார், தொல்காப்பியர் ஆகியோரின் தமிழ்ப் படைப்பாற்றலையும், தமிழ்த் தொண்டினையும் நினைவு கூர்ந்து அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், அவர்தம் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் சிறப்பு செய்யப்பட்டது. மேலும் மதுரை, தமுக்கம் மைதானத்தில் அமைந்துள்ள தமிழ்த்தாய் சிலைக்கு நாள்தோறும் மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது.

## 6. சங்கப் புலவர்களுக்கு நினைவுத் தூண்கள் புதிதாக நிறுவுதல்

ஒக்கூர் மாசாத்தியாருக்கு சிவகங்கை மாவட்டம் ஒக்கூரிலும், நல்லூர் நத்தத்தனாருக்கு செங்கல்பட்டு மாவட்டம் இடைக்கழி நாட்டிலும், மாங்குடி மருதனாருக்கு தென்காசி மாவட்டம் மாங்குடியிலும், கருவூர் புலவர்கள் பன்னிருவருக்குக் கரூர் மாவட்டம் கரூரிலும் நினைவுத் தூண்கள் 1990ஆம் ஆண்டு நிறுவப்பட்டன. தற்போது புதிதாக, கணியன் பூங்குன்றனாருக்குச் சிவகங்கை மாவட்டம் மகிபாலன் பட்டியிலும், கபிலருக்குக் கள்ளக்குறிச்சி

---

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல். குறள் **38**

மாவட்டம் திருக்கோவிலூரிலும் நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டுத் திறக்கப்பட உள்ளன.

மேலும், சங்கப்புலவர்களுக்கு நினைவுத் தூண்கள் புதிதாக நிறுவிட நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பெண்பாற்புலவர்கள் 40 பேருக்கு ஒரு நினைவுத் தூண் திருச்சிராப்பள்ளியிலும், நக்கீரருக்கு மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம், திரளி கிராமத்திலும், வல்வில் ஓரிக்கு நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையிலும், கவிச்சக்கரவர்த்தி கம்பருக்குச் சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டையிலும் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் நிறுவப்பட உள்ளன.

## 7. சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு

தனித்துவம் மிக்க நம் தமிழ்மொழியில் சிறந்த நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கவும், சிறந்த படைப்புகளை அளித்த நூலாசிரியர்களைப் பாராட்டும் வகையில் பரிசுத் தொகை ரூ.30,000/-மும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்திற்கு ரூ.10,000/-மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறுகின்றன.

---

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. குறள் **42**

## பரிசுப் போட்டிக்கான நூல்களின் வகைப்பாடுகள்:

1. சிறுவர் இலக்கியம்
2. மரபுக் கவிதை
3. புதுக்கவிதை
4. புதினம்
5. சிறுகதை
6. நாடகம் (உரைநடை, கவிதை)
7. திறனாய்வு
8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம்
9. பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள்
10. நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்)
11. அகராதி, கலைக்களஞ்சியம், கலைச்சொல்லாக்கம், ஆட்சித் தமிழ்
12. பயண இலக்கியம்

---

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. குறள் **43**

13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு

14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வாணிக வழிகளும், அகழாய்வு

15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல்

16. பொறியியல், தொழில்நுட்பவியல்

17. மானுடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல்

18. சட்டவியல், அரசியல்

19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல்

20. மருந்தியல், உடலியல், நலவியல்

21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்த மருத்துவம், ஆயுர்வேதம்)

22. சமயம், ஆன்மிகம், அளவையியல்

23. கல்வியியல், உளவியல்

24. வேளாண்மையியல், கால்நடையியல்

25. சுற்றுப்புறவியல்

26. கணினியியல்

---

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். குறள் **44**

27. நாட்டுப்புறவியல்

28. வெளிநாட்டு தமிழ்ப் படைப்பிலக்கியம்

29. இதழியல், தகவல் தொடர்பு

30. பிற சிறப்பு வெளியீடுகள்

31. விளையாட்டு

32. மகளிர் இலக்கியம்

33. தமிழர் வாழ்வியல்

போட்டிக்குப் பெறப்படும் நூல்கள் பேராசிரியர்கள், தமிழறிஞர்களைக் கொண்டு மதிப்பீடு செய்து தெரிவு செய்யப்படுகின்றன.

## 8. தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவித் திட்டம் (சிறந்த நூல்கள் / அரிய நூல்கள் / மொழிபெயர்ப்பு நூல்கள்)

சிறந்த நூல்களை வெளியிடுவதற்கும், அரிய நூல்களை மறுபதிப்பாக அச்சிடுவதற்கும் அதேபோன்று பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் ஆய்வு நூல்களுக்கும் நிதியுதவி

---

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. குறள் **45**

வழங்கப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட நூல்களின் நூலாசிரியரால் அளிக்கப்பட்ட அச்சக மதிப்பீடு எழுதுபொருள் அச்சுத் துறையால் ஆய்வு செய்து அளிக்கப்பெறும் அறிக்கையின் அடிப்படையில் பெரும அளவாக ரூபாய் 50,000/– வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 29 நூல்கள் தெரிவுசெய்யப்பெற்று நிதியுதவி வழங்கப்பெற்றுள்ளது.

## 9. குறள் பரிசு

இத்திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2000ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1330 குறட்பாக்களையும் முற்றோதல் செய்யும் மாணவ / மாணவியர்களுக்கு ரூ.10,000/– குறள் பரிசுத் தொகையாகவும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 70 பேர் என்ற உச்ச வரம்பு நீக்கப்பட்டுக் குறள்பரிசுத் தொகை வழங்கப்படவேண்டிய 219 மாணவ / மாணவியர்களுக்குத் தலா ரூ.10,000/– வீதம் வழங்கப்பட்டது. இனிவரும் ஆண்டுகளில் உச்சவரம்பின்றி, தெரிவு செய்யப்படும் அனைவருக்கும் பரிசுத் தொகை வழங்கப்படும்.

---

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன் குறள் **46**

## 10. பள்ளி /கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

நம் தாய்மொழியாம் தமிழ் மொழியை மாணவர்களிடத்தில் இளம்பருவத்திலேயே வளர்த்தெடுக்க மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பள்ளியில் பதினோறாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் தனித்தனியே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பணப்பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

**பரிசுத்தொகை விவரம்**

| வகைப்பாடு | பரிசு விவரங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்குத் தனித்தனியே வழங்கப்படும் பரிசுத் தொகை | முதல் பரிசு | 10,000 |
| | இரண்டாம் பரிசு | 7,000 |
| | மூன்றாம் பரிசு | 5,000 |

---

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. குறள் **47**

| வகைப்பாடு | பரிசு விவரங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| மாநில அளவில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்குத் தனித்தனியே வழங்கப்படும் பரிசுத் தொகை | முதல் பரிசு | 15,000 |
| | இரண்டாம் பரிசு | 12,000 |
| | மூன்றாம் பரிசு | 10,000 |

## 11. தலைவர்களின் பிறந்த நாளில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி நடத்துதல்

"நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். பேச்சுப் போட்டியில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு என்று

---

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. குறள் **48**

சிறப்புப் பரிசு ஒன்றும் ஏற்படுத்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 81 இலட்சத்து 60 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்" என்ற அறிவிப்பிற்கிணங்க 2021−2022ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியடிகள் மற்றும் ஜவகர்லால் நேரு ஆகியோரின் பிறந்த நாளில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுத்தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்றன.

| வகைப்பாடு | பரிசு விவரங்கள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| மாவட்ட அளவில் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்குத் தனித்தனியே வழங்கப்படும் பரிசுத் தொகை | முதல் பரிசு | 5,000 |
| | இரண்டாம் பரிசு | 3,000 |
| | மூன்றாம் பரிசு | 2,000 |
| அரசுப் பள்ளி மாணவர்கள் 2 பேருக்குச் சிறப்பு பரிசுத்தொகை | 2 பேர் x ரூ. 2000=ரூ.4,000 | |

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. குறள் **49**

## 12. இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை

இத்திட்டம் மேனாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1999 - 2000ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கு நடத்தப்பெறும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் முதல்பரிசு, இரண்டாம் பரிசு பெறும் மாணவர்கள் 200 பேரைக்கொண்டு இப்பயிற்சி பட்டறை ஒரு வாரக் காலம் நடத்தப் பெறுகிறது. மேலும், இப்பயிற்சிபட்டறையில்தமிழ் இலக்கியவினாடி-வினா நிகழ்ச்சியும் மாணவர்களிடையே நடத்தப் பெறுகிறது.

## 13. நூல்கள் நாட்டுடைமை

தமிழறிஞர்களின் படைப்புகள் எளிய முறையில் விலை மலிவாகக் கிடைத்திடும் வகையிலும் தமிழர்களின் கருத்துக் கருவூலங்கள் உலக மக்கள் அனைவரையும் சென்று சேர வேண்டும் என்ற உயரிய நோக்கிலும் தமிழறிஞரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இதுவரை 165 பேரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

---

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். குறள் **50**

## 14. நாட்டுடைமை நூல்களை அச்சிட்டு வெளியிடும் திட்டம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை 200 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 16 நூல்கள் அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது. தமிழறிஞர்களின் அரிய கருத்துக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் ஆண்டுதோறும் இதற்காக ரூபாய் 20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

## 15. தமிழுக்குத் தொண்டு செய்தோர்க்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்

### 15.1 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை

அகவை முதிர்ந்த காலத்தில் வறுமையில் வாடும் தமிழறிஞர்களின் இன்னலைப் போக்கிட உதவித் தொகை வழங்கும் திட்டம் 1978ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்த உதவித் தொகை அவர்களின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திங்கள்தோறும் உதவித் தொகையாக ரூபாய் 3,500/– மற்றும் மருத்துவப்படி

---

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. குறள் **51**

ரூபாய் 500/- வழங்கப்படுகிறது. இதுவரை 1134 பேருக்கு உதவித் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 15.2 அகவை முதிர்ந்த தமிழறிஞர்களின் மரபுரிமையருக்கு உதவித் தொகை

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களின் மறைவுக்கு பின் மரபுரிமையருக்கு வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவித்தொகை ரூ.2,500/- மற்றும் மருத்துவப்படி ரூபாய் 500/- என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது.

## 15.3 தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை

தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் தமிழ், தமிழ்ப்பண்பாடு, மொழி ஆகியவற்றைப் பாதுகாத்துத் தொண்டாற்றியும் தியாகம் செய்தவர்களுக்கும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.4500/- + அவற்றுடன் மருத்துவப்படியாக ரூ.500/-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை தமிழறிஞர்கள் 1104 பேருக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

---

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். குறள் **52**

## 15.4 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை

திங்கள்தோறும் உதவித்தொகை பெற்றுவந்த தமிழறிஞர்கள் இயற்கை எய்தியமைக்குப் பின் அவர்களின்மரபுரிமையர்களுக்கு(மனைவி/கணவன்) உதவித்தொகை மாதந்தோறும் வழங்கப்படுகிறது. அவ்வகையில் தற்போது மாதந்தோறும் உதவித்தொகையாக ரூ.2,500/– + மருத்துவப்படி ரூ.500/– எனவும் வழங்கப்படுகிறது. இதுவரை தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 989 பேருக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 15.5 எல்லைக் காவலர்களுக்கு உதவித்தொகை

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பு 1956ஆம் ஆண்டு மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. அவ்வகையில் சென்னை மாகாணம் தனி மாநிலமாக 01.11.1956ஆம் நாள் உருவானது. தமிழ்நாட்டில் தமிழர்கள் அதிகம் வாழும் சில பகுதிகள் (கன்னியாகுமரி, திருத்தணி, பீர்மேடு, கூடலூர், தேவிக்குளம்) அண்டை மாநிலங்களுடன் சேர்க்கப்பட்டபோது மீண்டும் அதைத் தமிழ்நாட்டோடு சேர்க்கப் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன.அவ்வாறான எல்லைப்போராட்டங்களில்

---

இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை — குறள் **53**

பங்கேற்றுச் சிறை சென்ற தியாகிகளுக்குத் தமிழக அரசு அவர்களின் வாழ்நாள் முழுவதும் உதவித் தொகையாக மாதந்தோறும் ரூ.5,500/- + மருத்துவப்படி ரூ.500/- எனவும் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை எல்லைக் காவலர்கள் 404 பேருக்கு உதவித் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் தற்போது 76 பேர் மட்டுமே உயிருடன் உதவித்தொகை பெற்றுவருகின்றனர். இவர்களின் தியாகத்தைப் போற்றும் வண்ணம் கடந்த ஆண்டு சிறப்பு நேர்வாக ரூபாய் 1 இலட்சம் வழங்கப்பட்டது.

## 15.6 எல்லைக் காவலரின் மரபுரிமையருக்கு உதவித்தொகை

எல்லைப் போராட்டத்தில் பங்கேற்று உதவித்தொகை பெற்றுவந்த எல்லைக்காவலரின் மறைவிற்குப்பின் அவருடைய மரபுரிமையர்களுக்கு வாழ்நாள் முழுவதும் உதவித்தொகை மாதந்தோறும் ரூ.3000/- + மருத்துவப்படியாக ரூ.500/-ம் வழங்கப்படுகிறது. இதுவரை எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் 265 பேருக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

---

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின் குறள் **54**

## 15.7 கட்டணமில்லா இலவசப் பேருந்துப் பயணச் சலுகை

தமிழ்நாடு அரசால் வழங்கப்பெறும் விருதுகளைப் பெற்ற விருதாளர்கள், உதவித்தொகை பெற்றுவரும் எல்லைக்காவலர்கள், தமிழறிஞர்கள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் மற்றும் அவர்தம் மரபுரிமையர்களுக்குத் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்யும் வகையில் இலவசப் பேருந்து பயணச் சலுகை வழங்கப்படுகிறது. மேலும் தமிழறிஞர் / எல்லைக்காவலர் மற்றும் அவர்தம் மரபுரிமையருக்கு இலவசப் பயணத்தின்போது உடன் ஒருவரை அழைத்துச் செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 15.8 தமிழறிஞர்கள் / எல்லைக்காவலர்களுக்கு ஈமச்சடங்குத் தொகை

தமிழறிஞர்கள் / எல்லைக்காவலர்கள் மறைவிற்குச் செய்யப்படும் ஈமச்சடங்குகளுக்கு ஆகும் செலவினத்திற்கு அவர்களின் மரபுரிமையர்களிடம் ஈமச்சடங்குத் தொகையாக ரூ.5,000/- வழங்கப்படுகிறது. இதுவரை மொத்தம் 41 பேருக்கு ஈமச்சடங்குத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

---

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. குறள் **55**

## 16. தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் நல்கைகள்

### 16.1 தமிழ்நாட்டில் வழங்கப்படும் நல்கைகள்

தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்குப் பெரும்பங்காற்றிவரும் சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சாவூர்–தமிழ்ப் பல்கலைக்கழகம், மதுரை–உலகத் தமிழ்ச்சங்கம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டப் பணிகளுக்கும் அவற்றில் பணிபுரியும் கல்விநிலை மற்றும்அலுவல்நிலைபணியாளர்களுக்குமான சம்பளம் உள்ளிட்ட பிற செலவினங்களுக்கென நல்கைகள் தேவையின் அடிப்படையில் ஆண்டுதோறும் வழங்கப் பெற்று வருகின்றன.

### 16.2 பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குதல் மற்றும் பேராசிரியர் பணியிடங்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

தமிழின் தொன்மை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை நாட்டின் பிற மாநிலங்களிலும் பரவச் செய்திடும் வகையில் பிற மாநிலங்களில் ஆர்வத்துடன் தமிழ் கற்றுவரும் மாணவர்களுக்குத் தமிழ்நாடு

---

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. குறள் **57**

அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, குப்பம் திராவிடப் பல்கலைக்கழகம்–ஆந்திரா, குவகாத்திப் பல்கலைக்கழகம்–அசாம், பனாரசு இந்துப் பல்கலைக்கழகம், உத்தரப் பிரதேசம் ஆகிய பல்கலைக்கழகங்களில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் ஆண்டுதோறும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மொழி ஆய்வுக்கூடம், இணைய வழியில் தமிழ் கற்றிடும் வகையில் கணினி வசதி மற்றும் தமிழ் நூலகம் அமைப்பதற்கும் தமிழ்நாடு அரசால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஆந்திர மாநிலம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர் ஒரு இணைப் பேராசிரியர், இரண்டு உதவி பேராசிரியர்கள் ஆகிய பணியிடங்களுக்கும் குவகாத்திப் பல்கலைக்கழகம், பனாரசு இந்துப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்குத் தலா ஓர் உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கும் நல்கை வழங்கப்பட்டுள்ளது.

## 16.3. பிற மாநிலங்களில் தமிழ் அமைப்புகள் / சங்கங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

பன்னெடுங்காலமாக புலம் பெயர்ந்த தமிழர்கள் தத்தம் வாழ்விடங்களில் தமிழர் பண்பாடு, நாகரிகம்,

---

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. குறள் **58**

தமிழ் மொழி ஆகியவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையிலும் வேரூன்றச் செய்யும் வகையிலும் தமிழ்ச் சங்கங்களை நிறுவிச் செயற்பட்டு வருகின்றன. அவ்வாறு, செயற்பட்டுவரும் தமிழ் அமைப்புகள், தமிழ்ச் சங்கங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசால் தமிழ் அமைப்புகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதியுதவியும் அங்குள்ள தமிழ்க் குழந்தைகள் தமிழ் கற்பதற்குத் தமிழ்ப் பாடநூல்களையும் இலவசமாக வழங்கி வருகிறது.

## 16.4 பிற மாநிலங்கள் / அயல்நாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவுதல்

தமிழ் மொழியை உலகெங்கிலும் பரவச் செய்திடும் வகையில் பிற மாநில, அயல்நாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவிட அங்கு வாழும் தமிழர்கள், தமிழ் அமைப்புகள் ஒன்று கூடி நிதி திரட்டி தமிழ் இருக்கை நிறுவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன அவர்களின் முயற்சிக்கு உறுதுணைபுரியும் வகையில் தமிழ் இருக்கை நிறுவிடும் பல்கலைக்கழகங்களுக்குத் தமிழ்நாடு அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

---

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. குறள் **59**

தமிழ் இருக்கை ஏற்படுத்துவதன் வாயிலாகத் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு, நாகரிகம் குறித்த ஆய்வுகள் மேம்படும். அயலகப் பல்கலைக்கழகங்களிலும் ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் நூல்கள் ஆய்வுக்குட்படுத்துதல் மற்றும் பழங்கால அரிய நூல்களைப் பதிப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகும்.

அந்த வகையில் ஜெர்மனியிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் நிதிப் பற்றாக்குறையால் மூடப்படும் நிலையில் இருந்த தமிழ்த்துறையைத் தொடர்ந்து செயற்படும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.1.25 கோடி வழங்கப்பட்டது.

---

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. குறள் **61**

## இயல் -2
## மொழிபெயர்ப்புத் துறை

*தொகுத்தல் விரித்தல் தொகைவிரி*
*மொழிபெயர்த்து*

*அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே*

*(தொல் : பொருள் : மரபியல் :98)*

என்பது தொல்காப்பியம் வகுத்த மொழிபெயர்ப்பு நெறியாகும்.

கோப்புகளும் ஆவணங்களும் உயிர்ப்புடையவை என்பதால், வருமொழிப் பொருண்மையுடன் ஒன்றிச் சிந்தித்து, அவற்றின் உணர்வுகளை உள்ளவாறே உள்வாங்கி, அவ்வுணர்வுகளுடன் தருமொழியில் மொழிபெயர்ப்பதில்தான் அலுவலக மொழிபெயர்ப்பின் வெற்றி அமைந்துள்ளது என்பர்.

அவ்வண்ணமே, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் பிரிவாகச் செயற்படும் தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவும் மொழியாக்கப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

---

1 மொழியாக்கப் பொருண்மைகள்:–

தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிடமிருந்து பெறப்படும் அரசாணை அறிவிக்கைகள், சுற்றோட்டக் குறிப்புகள், சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படும் ஏடுகள், பொதுக் கணக்குகள் குழு மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தணிக்கை அறிக்கைகள், பொதுத் தேர்தல் தொடர்பான கையேடுகள், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கைகள், மாநிலத் தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கைகள், விழிப்புப்பணி ஆணையத்தின் அறிக்கைகள் உள்ளிட்ட தலைமைச் செயலகத் துறைகள் தொடர்பான அனைத்துக் கோப்புகளும் ஆவணங்களும், நேர்விற்கேற்பத் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு உரிய துறைகளுக்கு உடனுக்குடன் அனுப்புதல் தலைமைச் செயலக மொழிபெயர்ப்புப் பிரிவின் பணியாகும்.

மேலும், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் செயலகத்திலிருந்தும், மாண்புமிகு இந்தியத் தலைமை அமைச்சர் அலுவலகத்திலிருந்தும் வரப்பெறும்

---

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். குறள் **67**

கடிதங்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அலுவலகச் செய்தி வெளியீடுகள் முதலியவற்றை மொழிபெயர்ப்பதும் மொழிபெயர்ப்புப் பிரிவின் செயற்பாடாகும்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழியாக்கம் மட்டுமல்லாது, தலைமைச்செயலகத்தின்பல்வேறுதுறைகளிடமிருந்து வரப்பெறும் இந்தி, மலையாளம் மற்றும் தெலுங்கு ஆகிய பிறமொழிசார்ந்த மொழியாக்கங்களையும் மொழிபெயர்ப்புப் பிரிவு தன் பணியாகக் கொண்டுள்ளது.

## 2 முகமைப் பணிகள்:–

மொழிபெயர்ப்புப் பிரிவுக்கு வரப்பெறும் கோப்புகளை மொழியாக்கம் செய்து உரிய துறைகளுக்கு அனுப்புவது மட்டுமல்லாது, மொழிபெயர்ப்புப் பிரிவைச் சேர்ந்த மொழிபெயர்ப்பு அலுவலர்கள் சிறப்பு நேர்வுகளாகப் பின்வரும் துறைகளுக்கு மாற்றுப்பணி அடிப்படையில் அனுப்பப்பட்டு, மொழியாக்கப் பணிகளை நிறைவேற்றியுள்ளனர். அவற்றின் விவரம் வருமாறு:–

---

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல். குறள் **70**

| தொ. எண். | துறை | பணி விவரம் |
|---|---|---|
| 1 | நிதித்துறை | மாண்புமிகு ஆளுநர் உரை, நிதிநிலையறிக்கை உரை, வெள்ளையறிக்கை போன்றவை |
| 2 | சட்டமன்றப் பேரவை | சட்ட மன்ற உறுப்பினர்கள் எழுத்துப் பூர்வமாக அளிக்கும் வினாக்கள், அவற்றிற்கான விடைகள் உள்ளிட்டவை |
| 3 | 6ஆம் மாநில நிதி ஆணையம் | நிதி ஆணைய அறிக்கை |
| 4 | மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறை | உரைப்பெயர்ப்பு |
| 5 | நீதியரசர் ஆறுமுகசாமி விசாரணை ஆணையம் | விசாரணை ஆணைய அறிக்கை |

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். குறள் **71**

### 3 மொழியாக்க அறிக்கை:–

01.05.2021 முதல் நாளது வரையில் தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளிடமிருந்து மொழியாக்கம் வேண்டி மொழிபெயர்ப்புப் பிரிவுக்கு வரப்பெற்ற பக்கங்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு:–

| | துறை | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | மாநில மனித உரிமைகள் ஆணையம் | 1981 |
| 2 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | 909 |
| 3 | சட்டமன்றப் பேரவைச் செயலகம் | 994 |
| 4 | தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை | 510 |
| 5 | மனித வள மேலாண்மைத் துறை | 480 |
| 6 | உள்துறை | 305 |
| 7 | சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் (ம) வனத்துறை | 275 |

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. குறள் **72**

| | துறை | பக்கங்கள் |
|---|---|---|
| 8 | தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை | 289 |
| 9 | பொதுத் துறை | 216 |
| 10 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | 208 |
| 11 | நிதித் துறை | 204 |
| 12 | பள்ளிக் கல்வி துறை | 173 |
| 13 | வணிகவரி மற்றும் பதிவுத் துறை | 149 |
| 14 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | 139 |
| 15 | தொழில் துறை | 117 |
| 16 | சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை | 113 |
| 17 | மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை | 93 |
| 18 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 89 |

அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு. குறள் 74

| | துறை | பக்கங்கள் |
|---|---|---|
| 19 | சமூகச் சீர்திருத்தத் துறை | 80 |
| 20 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | 79 |
| 21 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 71 |
| 22 | கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை | 66 |
| 23 | ஆளுநர் அலுவலகம் | 67 |
| 24 | சட்டத் துறை | 42 |
| 25 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 37 |
| 26 | மாற்றுத் திறனாளிகள் நலத்துறை | 36 |
| 27 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 25 |
| 28 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 17 |
| 29 | போக்குவரத்துத் துறை | 17 |

அறத்திற்கே அன்புசார் என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. குறள் **76**

| | துறை | பக்கங்கள் |
|---|---|---|
| 30 | வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை | 14 |
| 31 | எரிசக்தி துறை | 13 |
| 32 | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | 12 |
| 33 | நீர்வளத்துறை | 9 |
| 34 | ஏனையவை | 177 |
| | மொத்தம் | 8006 |

உலக நாகரிக வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய மொழிபெயர்ப்பு இன்று தொழில்நுட்ப வளர்ச்சியோடு இணைந்து பல துறைகளிலும் இணைய மொழியாக்கம் முதலிய புதுமைகளை ஏற்றுள்ளது. அவ்வாறே, தலைமைச் செயலகத்தின் மொழிபெயர்ப்புத் துறையும் கோப்புகளைக் கணினியில் தட்டச்சு செய்து மொழியாக்கம் செய்யப்பட்ட கோப்புகளை உரிய துறைகளுக்கு மின்னஞ்சல் வாயிலாகவும் அனுப்பி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

---

என்பிலதனை வெயில் போலக் காயுமே
அன்பி லதனை அறம். குறள் 77

# இயல் – 3
## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

### 1. தோற்றம் :

"உயர்தனி செம்மொழியான தமிழ்மொழி என்னுடைய தாய்மொழி என்ற பெருமிதம் எனக்கு இருக்கிறது. எங்கள் உயிருடன் வாழ்வுடன் கலந்த மொழி தமிழ்மொழி. அந்தத் தமிழ்மொழி மற்றெதற்கும் தாழாத வகையில் ஆட்சிமொழி என்ற தகுதி தரப்படும்வரை நான் அமைதி பெறமாட்டேன், திருப்தி அடையமாட்டேன்" என்று முழங்கினார் பேரறிஞர் அண்ணா.

பேரறிஞர் அண்ணாவின் அடியொற்றி அருந்தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் அன்றாடம் சொல்வளத்தைக் கூட்டுவதற்கும் நல்ல பல ஆக்கத் திட்டங்களைச் செயற்படுத்தினார் முத்தமிழ்அறிஞர் கலைஞர் அவர்கள். அவ்வகையில், அவர்தம் உன்னதமான மொழிப்பற்றில் விளைந்ததுதான் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம். அகராதி உருவாக்கப் பணியின் தேவையை நன்கு உணர்ந்திருந்ததால்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்,

---

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு குறள் **79**

"தம் அரசு அமையும் காலங்களில் மிகு கவனம் பெற்றுவரும் மற்றொரு மகத்தான பணி "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி"யை உருவாக்கிடும் பெருமைக்குரிய பணி" என்று குறிப்பிட்டார்.

முத்தமிழ் அறிஞரின் வழியில் முத்தமிழ் நாட்டை ஆண்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இனிமை, வளமை, செம்மை, வியன்மை போன்ற சிறப்புகளை ஒருங்கேயுடைய தமிழ்மொழியை என்றும் குன்றாத வண்மொழியாக மிளிரச் செய்வதற்குச் சொல்லாக்கம் மிகவும் இன்றியமையாததாகும்" என்று குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து, தமிழ் வளர்ச்சி என்பது அவ்வப்போது உருவாக்கப்படும் கலைச்சொற்களையும் சார்ந்தது என்பதை உணரலாம்.

ஆம், மொழி மக்களோடு இரண்டறக் கலந்த உணர்வு. தொல்லாய்வை போன்றே சொல்லாய்வு மூலமாகவும் மக்களினத்தின் நீண்டநெடிய வரலாற்றை மீட்டெடுக்க முடியும். சொற்களின் எண்ணிக்கையே மொழிவளத்தின் அளவுகோல். மொழியைப் பாதுகாக்க அதன் சொற்களை உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும். அதற்குக் காலந்தோறும் அகராதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

---

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. குறள் **81**

அந்தவகையில், தமிழ்மொழியில் அகராதிகள் உருவாக்கத்திற்கென்றே 1974ஆம் ஆண்டு 'முத்தமிழ் அறிஞர்' கலைஞர் அவர்களால் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தோற்றுவிக்கப்பெற்றது.

## 2. நோக்கம் :

அகராதிகள் வெறுமனே சொல்லுக்குப் பொருள் சொல்லும் நூல்கள் மட்டுமே அல்ல. அவை மொழியின் வளர்நிலை காட்டும் காலக் கருவூலங்களாகும். சொற்களையும் அவற்றின் பொருள்களையும் தெளிவாகத் தெரிந்து பயன்படுத்தும்போதுதான் பேச்சும் செயலும் செம்மைப்படும். அதன்வழிப் பேசுவோரின் அறிவும் புகழும் விரிவடையும். அதற்கு அகராதிகள் நமக்குத் துணைசெய்யும். மொழி காலந்தோறும் வளர்நிலைக்கு உட்பட்டதாகும். எனவே மொழி உள்ளவரை அகராதிப் பணியும் இடையறாது நடைபெறவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

---

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. குறள் **83**

## 3. இயக்ககச் செயற்பாடுகள் :

### 3.1. வெளியீடுகள் :

தமிழ்மொழியின் பாதுகாப்பினையும் மேம்பாட்டையும் நோக்கமாகக் கொண்டு 1974ஆம் ஆண்டுமுதல் அகராதிப் பணிகளைச் செய்துவரும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககமானது, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் 31 தொகுதிகளை வெளியிட்டு, அவற்றை எண்மிய(Digitize)மாக்கித் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது. மேலும், சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் சுருக்கப் பதிப்பு, தமிழ் வினைச்சொல் அகரமுதலி, 1 முதல் 5ஆம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு வண்ணப்படங்களுடன் கூடிய 'நற்றமிழ் அறிவோம்' என்னும் தூயத் தமிழ் அகரமுதலி, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வேர்ச்சொல் சுவடி ஆகியன இவ்வியக்ககத்தால் வெளியிடப்பட்டுள்ளன. விக்சனரி பொதுத்தளத்தின் வழியாகவும் இவ்வியக்ககப் படைப்புகள் மக்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளன.

---

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் குறள் **85**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் திருந்திய பதிப்பு, நடைமுறைத் தமிழகராதி, மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி, அயற்சொல் அகராதி, பையடக்க அகராதி, தமிழ் மரபுத்தொடர் அகராதி, மயங்கொலிச் சொல்லகராதி, ஒருபொருட்பன்மொழி அகராதி, ஆட்சிச்சொல் குறுநூல் ஆகியவை அச்சுக்கு அணியமாக்கப்பட்டுள்ளன.

## 3.2. தமிழ்க் கலைக்கழகம்

ஊடகம் மற்றும் மக்களின் பயன்பாட்டில் உள்ள பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான தமிழ்க் கலைச்சொற்களை இயக்ககத்தின் வழியே உருவாக்கி, வல்லுநர் குழுவைக்கொண்டு செம்மைப்படுத்தி, அரசின் இசைவு பெற்று வெளியிட்டு வருகிறது. திங்களுக்கு இரண்டு வல்லுநர்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, கலைச்சொற்களை வடிவமைக்கும் வகையில் திட்டமிடப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவருகிறது.

இச்சொற்களைத் தேவையான இடங்களில் படங்களுடன் இவ்வியக்ககத்தின் சொற்குவை வலைத்தளத்தின் (sorkuvai.com) வழியாகவும், முகநூல் (Facebook), புலனம் (Whatsapp), சுட்டுரை (Twitter),

---

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. குறள் **86**

படவரி (Instagram), சொல்வயல் திங்கள் மின்னிதழ் வாயிலாகவும் பொதுமக்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், ஆய்வறிஞர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 2022 ஏப்பிரல் 13ஆம் நாள் வரை நடைபெற்ற கூட்டங்கள் | – | 108 |
| இதுவரை தொகுக்கப்பட்ட சொற்கள் | – | 64,213 |
| சொல்லாய்வு வல்லுநர்களால் ஏற்பளிக்கப்பட்ட சொற்கள் | – | 37,934 |
| அரசாணை பெறப்பட்டுள்ள சொற்கள் | – | 22,700 |

### 3.3. சொற்குவை வலைத்தளம்

சொற்குவை வலைத்தளத்தில் (sorkuvai.com) 2022 ஏப்பிரல் வரை 7,58,109 தமிழ்ச் சொற்கள் பதிவேற்றம் செய்யப்பெற்றுள்ளன. இயக்ககத்தின் பதிப்பாசிரியர்கள், உதவிப் பதிப்பாசிரியர், தொகுப்பாளர்களால் வடிவமைக்கப்பட்டு, தமிழ்க் கலைக்கழகத்தில் ஏற்பு பெறும் கலைச்சொற்கள், இவ்வியக்ககம் நடத்தும் துறைசார் வல்லுநர் குழுக் கூட்டங்கள், சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம், களப்பணி

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. குறள் **190**

போன்றவற்றின் மூலம் கிடைக்கும் கலைச்சொற்கள், தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் வழங்கும் பல்வேறு துறை சார்ந்த புதிய தமிழ்க் கலைச்சொற்கள் ஆகியவை வல்லுநர் குழுவின் ஏற்புக்குப் பின் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

## 3.4 சொற்குவை - கட்டணமில்லா அழை மையம் (14469)

சொற்குவையின் ஒரு பகுதியாக, இவ்வியக்ககத்திலேயே 'சொற்குவை' கட்டணமில்லா அழை மையம் (Toll Free Call Centre) செயற்பட்டு வருகிறது. காலை 10.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை அழை மைய எண்ணான 14469 இல் தொடர்புகொள்வோர்க்கு 'தமிழ்ச் சொற்கள்' குறித்த ஐயங்களுக்கான விடையும், ஆங்கிலத்திற்கு நிகரான தமிழ்ச் சொற்களும், தமிழுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களும் இவ்வியக்ககப் பணியாளர்களால் சொல்லப்பட்டு வருகின்றன.

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். குறள் **191**

## 3.5 தமிழ் அகராதியியல் நாள் விழா

தமிழ் அகராதியியல் அமைப்பு முறைக்கு முன்னோடியாக விளங்கியவரும், "தமிழ் அகராதியியலின் தந்தை" என்று புகழப்படுபவருமாகிய வீரமாமுனிவரின் தமிழ்த்தொண்டைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் 8ஆம் நாளை 'தமிழ் அகராதியியல் நாளாகக்' கொண்டாடவும், இரண்டு நாள்கள் பன்னாட்டு கருத்தரங்கமும் நடத்தத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இவ்விழாவில், தூயதமிழிலேயே பேசுகின்ற மூவருக்குத் தூய தமிழ்ப்பற்றாளர் சான்றிதழுடன் ஐந்தாயிரம் ரூபாய் பரிசுத்தொகையும், பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான சொல்லாக்கம் மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு இரண்டு போட்டிகளிலும் முறையே முதல் பரிசாக ரூ.10,000/–மும், இரண்டாம் பரிசாக ரூ.5,000/–மும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய 'அகராதி ஆய்வு மலர்' வெளியிடப்படுகிறது. இவ்விழாவில், இவ்வியக்ககம் சார்பில் 5 வகையான விருதுகள் 43 பேருக்கு வழங்கப்பட்டுவருகின்றன.

---

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து. குறள் **194**

## 3.6 விருதுகள்

### அ. தேவநேயப் பாவாணர் விருது

அகராதித் துறையில் சிறந்த பங்களிப்பை நல்கிவரும் தகுதிவாய்ந்த உள்நாட்டு அகராதியியல் அறிஞர் ஒருவருக்குத் தேவநேயப் பாவாணர் விருதும், விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும், 1 சவரன் தங்கப்பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படுகின்றன. 2021ஆம் ஆண்டுக்கான தேவநேயப் பாவாணர் விருதினை 15.03.2022ஆம் நாள் நடைபெற்ற விழாவில் முனைவர் கு.அரசேந்திரன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தம் பொற்கரங்களால் வழங்கிச் சிறப்பித்தார்.

### ஆ. வீரமாமுனிவர் விருது

அகராதித் துறையில் சிறந்த பங்களிப்பை நல்கிவரும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத, பிறப்பால் வெளிநாட்டைச் சார்ந்த, தகுதிவாய்ந்த அகராதியியல் அறிஞர் ஒருவருக்கு வீரமாமுனிவர் விருது வழங்கப்பட்டு வருகின்றது. விருதுத் தொகையாக ரூ.2 இலட்சமும், 1 சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

---

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல். குறள் **196**

## இ. தூயதமிழ்ப் பற்றாளர் விருது

அன்றாட நடைமுறையில் பிறமொழிக் கலப்பின்றித் தூயதமிழ் பேசுவோரை ஊக்குவிக்க மாவட்டந்தோறும் ஒருவருக்கு 'தூயதமிழ்ப் பற்றாளர் விருது'. விருதுத் தொகை தலா ரூ.20,000/– மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

## ஈ. தூயதமிழ் ஊடக விருது

தூயதமிழைப் பயன்படுத்தும் காட்சி ஊடகங்களையும், அச்சு ஊடகங்களையும் பாராட்டி ஊக்கமளிக்கும் வகையில், ஆண்டுதோறும் ஒரு காட்சி மற்றும் ஓர் அச்சு ஊடகத்திற்கு 'தூயதமிழ் ஊடக விருது'. விருதுத் தொகை தலா ரூ.50,000/–, தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

## உ. நற்றமிழ்ப் பாவலர் விருது

தம் கவியாக்கங்களில் பிறமொழியின்றித் தூயதமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் கவிஞர்களுள் மரபுக்கவிஞர் ஒருவருக்கும், புதுக்கவிஞர் ஒருவருக்கும் 'நற்றமிழ்ப் பாவலர் விருது' விருதுத் தொகை தலா ரூ.50,000/–, தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

---

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. குறள் **197**

## 3.7 'சொல் வயல்' திங்கள் மின்னிதழ்

சொல்லாய்வுகள், துறைக் கலைச்சொற்கள், கலைச்சொல்லாக்கம், அகராதியியல், மொழியியல் சார்ந்த கருத்துகள், தமிழ்மொழி குறித்த செய்திகள் உள்ளிட்டவற்றைக் கொண்டு "சொல்வயல்" மின்னிதழ் சொற்குவை வலைத்தளத்தில் (sorkuvai.com) 2020சூன் மாதத்திலிருந்து மாதந்தோறும் வெளியிடப்பட்டுவருகிறது. 2022 ஏப்பிரல் வரை 23 இதழ்கள் வெளிவந்துள்ளன.

## 3.8 சொற்குவை மாணவத்தூதுவர் பயிற்சித் திட்டம்

கல்லூரி மாணவர்களிடையே கலைச்சொல்லாக்கத் திறனை வளர்த்தெடுத்து, அவர்களின் தனித்தமிழ்ப் பற்றினை ஊக்குவிக்கும் வகையில் 'சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை இராணிமேரி கல்லூரி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,வாணியம்பாடி – இமயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் இசுலாமியாக் கல்லூரி ஆகியவற்றில் "சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டத்தின்கீழ்" 400 மாணவர்களுக்குத் தூயதமிழ்ப் பயிற்சி அளிக்கப்பெற்றுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

---

பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். குறள் **199**

## 3.9 சொற்குவை வல்லுநர் குழுக் கூட்டம்

சொற்குவையை வளப்படுத்தும் வகையில், பலதுறைகளில் காலத்திற்கேற்பப் புழங்கிவரும் கலைச்சொற்களைத் தொகுத்துச் சொற்குவையில் சேர்ப்பதற்கு ஏதுவாக மூன்று திங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் ஆண்டுக்கு நான்குமுறை துறைசார் வல்லுநர் குழுக்கூட்டம் நடத்தப்பட்டுவருகின்றன. அவ்வகையில், 19.08.2021ஆம் நாள் கணினித்தொழில்நுட்பத் துறை சார்ந்தும், 12.02.2022ஆம் நாள், அருங்காட்சியகம், கல்வெட்டியல், தொல்லியல் துறைகள் சார்ந்தும் வல்லுநர் குழுக்கூட்டங்கள் நடத்தப்பெற்று 1,670 கலைச்சொற்கள் பெறப்பட்டன.

## 3.10 வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி:

தமிழ்நாட்டின் பகுதிகளைச் சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, கோவை என 6 மண்டிலங்களாகப் பகுத்து அப்பகுதிகளுக்கு நேரில் சென்று கள ஆய்வு செய்து அப்பகுதிகளில் வழங்கும் வட்டார வழக்குச் சொற்களைப் பொருளுடன் தொகுத்து, 2 ஆண்டுகளில் 'வட்டார வழக்குச் சொற்பொருள் அகராதி" வெளியிடப்படவுள்ளது.

---

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. குறள் **201**

இதற்காக 6 மண்டிலங்களுக்கும் தனித்தனியே ஒருங்கிணைப்பாளர்கள் அமர்த்தப்பட்டுள்ள நிலையில், 2022 ஏப்பிரல் திங்கள் வரை 1815 சொற்கள் திரட்டப்பெற்றுள்ளன.

## 3.11 அரசுத்துறைகளில் புதிய கலைச்சொற்கள்

*"தொண்டு செய்வாய் தமிழுக்குத்*
*துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே"*

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அரசுத்துறைகளில் புழங்கும் பிறமொழிக் கலைச்சொற்களுக்கு நிகரான தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்துப் புழக்கத்திற்குக் கொண்டுவருவது தமிழ்வளர்ச்சிக்கான அடிப்படைச் செயலாகும்.

அந்தவகையில், 16.12.2021ஆம் நாள் வேளாண்மைத் துறையிலும், 21.12.2021ஆம் நாள் நீர்வளம் (ம) ஆதாரத் துறை மற்றும் கட்டடப் பராமரிப்பு பொதுப்பணித் துறையிலும், 14.03.2022ஆம் நாள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையிலும், 18.03.2022ஆம் நாள் நகராட்சி நிருவாக அலுவலகத்திலும், 25.03.2022ஆம் நாள் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திலும் துறைசார் புதிய கலைச்சொற்கள் குறித்த கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பெற்று மொத்தம் 1634 கலைச்சொற்கள் பெறப்பட்டன.

---

## 3.12 தமிழ் கற்பிக்கும் செயலி

தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட திராவிட மொழிகளிலும், ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிகளிலும் தமிழ்மொழியை இலகுவாகக் கற்கும் வகையில் பாடநூல்களையும் பன்மொழி அகராதிகளையும் உள்ளடக்கிய திறன்மிகு குறுஞ்செயலி உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்றுவருகின்றன.

## 3.13 மக்களை நோக்கி அகராதிகள்

அகராதிகள், கலைச்சொற்கள், தமிழ் மின் நூல்கள், சொல்வயல் மின்னிதழ், அகராதி ஆய்வுமலர் போன்றவை படைப்பாக்கப் பொது உரிமத்தின்கீழ், சொற்குவை வலைத்தளத்திலும், விக்சனரி பொதுத் தளத்திலும் வெளியிடப்பட்டுவருகின்றன.

## 3.14 இணையவழிப் பன்னாட்டு கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம்

புறநிலையில் உள்ள பலதுறை சார்ந்த அறிஞர்களிடமிருந்து தமிழ்க் கலைச்சொற்களைப் பெற்றுச் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யும் நோக்கில் 01.10.2021ஆம் நாளிலிருந்து

---

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழம் சூழ்ந்தவன் கேடு. குறள் **204**

இணையவழிப் பன்னாட்டு கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம்நடத்தப்பெற்றுவருகிறது. இதுவரையிலான 29 அமர்வுகளில், பாரிசு, நார்வே, மலேசியா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், ஆசுதிரேலியா, இங்கிலாந்து, செருமனி, தாய்லாந்து, மொரிசியசு, இலங்கை, நியூசிலாந்து, கொரியா, சப்பான், துபாய், ஓமன், குவைத், தைவான், பின்லாந்து, மியான்மர், அயர்லாந்து, ஆங்காங், சுவீடன், சவுதி அரேபியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அயலக அறிஞர்களும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தாயக அறிஞர்களும் பங்கேற்றுள்ளனர்.

15.04.2022ஆம் நாள் நடைபெற்ற 29ஆவது அமர்வு வரை 82 அயல்நாட்டறிஞர்கள், 56 உள்நாட்டு அறிஞர்கள் என மொத்தம் 138 அறிஞர்கள் பங்கேற்று 3,430 தமிழ்க் கலைச்சொற்களை வழங்கியுள்ளனர். வல்லுநர்களின் ஆய்வுக்குப்பின் அவை சொற்குவையில் பதிவேற்றம் செய்யப்பட்டுவருகின்றன.

29 அமர்வுகளில் 2,420க்கும் மேற்பட்டோர் பார்வையாளர்களாகப் பங்கேற்றும், கலைச்சொல்லாக்கங்கள் குறித்த தங்கள் கருத்துகளைத் தெரிவித்தும் பயன்பெற்றுள்ளனர்.

---

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். குறள் **206**

அமர்வில் பங்கேற்கும் அறிஞர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இயக்ககத்தின் சார்பில் மின்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

*"தமிழ்காப்பாய் புத்துணர்வைக் கொணர்வாய்*
*இங்கே*

*அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும்*
*துறைதோறும் அழகு காப்பாய்!*

*இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும்*
*முதற்பணியாம் எழுக நன்றே!"*

என்ற பாவேந்தரின் தமிழ் முழக்கத்தை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நெறியாளுகையின்கீழ் தமிழ்நாடு அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் தன் பணியை வகுத்துக்கொண்டு திறம்படச் செயலாற்றிவருகிறது.

---

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று. குறள் **208**

## இயல் – 4

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

### 1 தோற்றம்

உலக அளவில் அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆய்வினையும் ஒத்த துறைகளில் ஆர்வமுடைய உலகெங்கணும் உள்ள தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்து ஒல்லும் வகையெல்லாம் தமிழ் ஆய்வினைத் தொடரும் நோக்கில் இந்நிறுவனம் மேனாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரு விழைவால், 1970ஆம் ஆண்டு மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ்த் தோற்றுவிக்கப்பட்டது.

### 2 நோக்கம்

- உயர் தமிழாய்வினை ஊக்குவிக்கும் கல்விச் சூழலை உருவாக்குவது;
- தேவை கருதி ஆராய்ச்சியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது;
- தமிழாய்வில் தேர்ந்த அல்லது பிறநாட்டு அறிஞர்களுள் ஆர்வமுடையவர்களுடன் நெருங்கிய தொடர்பினை மேற்கொண்டு இத்துறைகளில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுதல்;

---

தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். குறள் **209**

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் கல்விச் சூழல் பாதிக்காத வகையில் இதன் நோக்கங்களை நிறைவேற்றும் பிற கல்வி நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பிறநாட்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனியர் ஆகியோருடன் இணைந்து செயல்படுவது.
- தரமான உயராய்வு நூலகத்தைப் பேணுதல்.

## 3 ஆளுகைக்குழு

தலைவர் – மாண்புமிகு தொழில் துறை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்கள்

துணைத் தலைவர்கள் – அரசுத் துறைச் செயலாளர், சென்னை, மதுரை, அண்ணாமலை மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள்.

உறுப்பினர்கள் – நிதித் துறைச் செயலாளர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற (ஐ.ஏ.டி.ஆர்.) பிரதிநிதி ஒருவர்,மைசூர்,இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் மற்றும் உறுப்பினர் – செயலராக இந்நிறுவன இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஆளுகைக் குழுவின் வழிகாட்டுதலோடு தன்னாட்சி நிறுவனமாக இந்நிறுவனம் இயங்கிவருகிறது.

---

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு. குறள் **211**

## 4 செயற்படும் புலங்கள்

1. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம்
2. தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம்
3. சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப்புலம்
4. அயல்நாட்டு தமிழர் புலம்

## 5 செயற்பாடுகள்

இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஆய்வுக் களங்களாக இலக்கியவியல், இலக்கணவியல், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பியல் போன்ற பிரிவுகளோடு தமிழ்க் கலைகள், தமிழர் பண்பாடு குறித்த ஆய்வுப் பணிகளும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. மேலும், பன்னாட்டு கருத்தரங்கம், தேசியக் கருத்தரங்கம், மாநாடு மற்றும் பயிற்சிப் பட்டறை ஆகியனவும் நடத்தப்பட்டுவருவதோடு, நிறுவனத்தில் கல்விசார் அலுவலர்களால் தனித்தனியே திட்டப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

---

## 5.1 ஆய்வுத் துணைமைப் பணிகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை நோக்கமான ஆராய்ச்சிப் பணிகளோடு தமிழாய்வு மாணவர்களை உருவாக்கும் உயரிய நோக்கோடு கற்பித்தல் பணியும் ஒருங்கே மேற்கொண்டு வருகிறது. இதன் விளைவாக, தமிழ் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழக மற்றும் சென்னைப் பல்கலைக்கழக இணைவுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பு மற்றும் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பு தமிழ்ப் பல்கலைக்கழக இணைவுடன் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ் இலக்கியம் மற்றும் சுவடிப்புலம் வழியாக ஓராண்டு தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பும், திருக்குறள் ஓவியக் காட்சிக்கூட ஒருங்கிணைப்பில் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் ஓர் ஆண்டுப் பட்டய வகுப்பும் நடத்தப்பட்டு வருகின்றன.

## 5.2 கணினி மயமாக்கப்பட்ட மொழிப்பயிற்சி ஆய்வுக்கூடம்

தமிழ்நாடு அரசின் நிதியைப் பெற்று அமைக்கப்பட்ட கணினி மயமாக்கப்பட்ட மொழிப்பயிற்சி ஆய்வுக்கூடத்தின் வழியாகத் தமிழ் மொழியின்

---

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். குறள் **217**

சிறப்பினைப் பிற மாநிலத்தவரும் பிற நாட்டவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்மொழி (ம) மொழியியல் புலம் வழியாகத் தமிழ் மொழி கற்பிக்கும் பணி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 3 திங்கள் கால அளவு கொண்ட அறிமுக நிலை வகுப்பு, 6 திங்கள் கால அளவு கொண்ட சிறப்பு நிலை வகுப்பு என இருவேறு பிரிவுகளில் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அமெரிக்கா, பிரான்சு, செருமனி, கனடா, தென் ஆப்பிரிக்கா, சுவிடன், சீனா, கொரியா, சப்பான், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்தும் இதுவரை ஏறத்தாழ 620 பேர் நிறுவனத்தின் வழி தமிழ்மொழியைக் கற்றுள்ளனர். இவ்வாண்டு 2 ஸ்பெயின் நாட்டவரும் 1 பிரான்சு நாட்டவரும் தமிழ் மொழி கற்று வருகின்றனர்.

## 5.3 திருக்குறளைப் போற்றும் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம்

உலகப் பொதுமறையாம் திருக்குறள் மற்றும் திருவள்ளுவர் தொடர்பான அரிய புகைப்படங்கள், ஓவியங்கள், திருக்குறள் தொடர்பான நூல்கள் தமிழ்நாடு அரசின் ரூ.10.00 இலட்சம் நிதியுதவியுடன் நிறுவனத்தில்

---

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு. குறள் **219**

அமைக்கப்பட்டுள்ள திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதிகாரத்திற்கு ஓர் ஓவியம் என்ற அமைவில் 133 ஓவியங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இக்காட்சிக்கூடத்தை நாள்தோறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், வெளிநாட்டினர் ஆகியோர் கண்டுகளித்து வருகின்றனர். இவை மட்டுமின்றி, திருக்குறளைப் பள்ளிப் பருவத்திலேயே மாணவர்கள் கற்றுணரும்வகையில்திருக்குறள்முற்றோதல்பயிற்சி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியனவும் நடத்தப்பட்டு வருகின்றன.

## 5.4 உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்

தமிழ்நாடு அரசின் ரூ.10.00 இலட்சம் நிதியுதவியுடன் நிறுவனத்தில் "உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையம்" தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக அயலகத் தமிழர் தொடர்பான அனைத்துத் தகவல்களையும், அயலகத் தமிழ் அறிஞர்களுடன் தொடர்புகொண்டு பெற்று, ஒருங்கே கிடைக்கும் வண்ணம் திரட்டி பராமரிக்கப்பட்டு வருகிறது.

---

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. குறள் **220**

ஆண்டுதோறும் பன்னாட்டு கருத்தரங்கம், பயிலரங்கம், அயல்நாட்டு தமிழறிஞர்களைக் கொண்டு சிறப்பு சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் இம்மையத்தால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், இந்த மையத்தின் வாயிலாக, முதலாவது உலகத் தமிழிசை மாநாடு மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் 2019 திசம்பர் 14,15 ஆகிய நாள்களில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் அமெரிக்கா, கனடா, ஆசுதிரேலியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து பல்வேறு தமிழறிஞர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் கலந்துகொண்டனர். மாநாட்டில் 250க்கும் மேற்பட்ட அறிஞர்கள் தங்களது படைப்பினைக் கட்டுரையாக வழங்கினர். இக்கட்டுரைத் தொகுப்புகள் "உலகத் தமிழிசை ஆய்வுகள்" எனும் தலைப்பில் 3 தொகுதிகளாக நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

## 5.5 ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம்

தமிழ்ச் சுவடிகள் குறித்தும் அவற்றைப் பாதுகாத்தலின் இன்றியமையாமையை உணர்ந்தும் நம் முன்னோர்களின் அறிவுக் கருவூலமாக விளங்கும் சுவடிகளைப் பாதுகாத்துப் பேணிட நிறுவனத்தில்

---

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. குறள் **222**

தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.34 இலட்சம் நிதியில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவம், இலக்கணம், இலக்கியம், செய்யுள், காலக்கணிதம், காலச்சுவடுகள், தனிப்பாடல்கள், தனிக்குறிப்புகள் போன்ற தலைப்புகளில் ஓலைச்சுவடிக் கட்டுகளும், நூற்றுக்கும் மேற்பட்ட தாள் சுவடிகளும் திரட்டி பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள அனைத்துச் சுவடிக்கட்டுகளுக்கும் விரிவான விளக்க அட்டவணை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு வழங்கும் நிதியைக் கொண்டு, தமிழகத்திலும் பிற இடங்களிலும் உள்ள பாதுகாக்கப்படாத சுவடிகளைக் களப்பணி வாயிலாக அடையாளங்கண்டு அவற்றை மின்னெண்மம் செய்து இம்மையத்தால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## 5.6 பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்

தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ. 346 இலட்சம் சிறப்பு நிதியைக்கொண்டு உலகத்தமிழாராய்ச்சிநிறுவனத்தில் பழந்தமிழர்களின் சிறப்புகளை உலகறியச்செய்யப் பல்வேறு காட்சி அமைப்புகளைக் கொண்டு காண்போர்

---

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். குறள் **225**

வியக்கும் வண்ணம் கற்சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள், மரச் சிற்பங்கள், அணிகலன்கள், புடைப்பு ஓவியங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்காட்சிக்கூடத்தில் உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்த்தாய் ஊடக அரங்கில் பார்வையாளர்களைக் கவரும் வகையில் பழந்தமிழர் வாழ்வியல்,தமிழ் மருத்துவம்,நீர்மேலாண்மை,போரியல், ஆட்சித்திறன், பழந்தமிழர் நெசவுத் தொழில்நுட்பம், பழந்தமிழர் கட்டடக்கலை நுட்பம், பழந்தமிழர் ஐந்திணை வாழ்வியல், பழந்தமிழர் வேளாண்மை, தமிழர் மரபுக் கலைகள் ஆகிய 10 தலைப்புகளில் குறும்படங்கள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுப் பார்வையாளர்களுக்குத் திரையிடப்பட்டு வருகின்றது.

## 5.7 ஆய்விருக்கைகள்

ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறப்பான பங்களிப்பு துறைசார்ந்த ஆய்வு முடிவுகளை வெளியிடுவது ஆகும். இதனைக் கருத்தரங்கம் பயிலரங்கம் சிறப்புச்சொற்பொழிவு வாயிலாகவே வெளிக்கொணர இயலும். அந்த வகையில் ஆய்வுப் பணிகளைச் செம்மையுடன் மேற்கொள்ள அரசு பங்களிப்பு மற்றும்

---

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. குறள் **226**

தனிமனிதக் கொடையைக் கொண்டு நிறுவனத்தில் 15 ஆய்விருக்கைகள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம் பட்டய வகுப்புகள், கருத்தரங்குகள், சிறப்புப் பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 5.8 அறக்கட்டளைகள்

தமிழார்வலர்களின் நிதியுதவியோடு தமிழ்ச் சான்றோர்களின் பெயரில் இதுவரை 53 அறக்கட்டளைகள் நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம் சிறப்புப் பொழிவுகள் நடத்தப்பட்டு அப்பொழிவுகள் நூல்களாக வெளியிடப்பட்டு வருகின்றன.

## 5.9 நூல் வெளியீடுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவனக் கருத்தரங்கக் கட்டுரை தொகுப்புகள், அறக்கட்டளை சொற்பொழிவுகள், சுவடிப்பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அரியநூல்கள் மறுபதிப்பு, பிற தமிழறிஞர்களின் படைப்புகள் என்றபிரிவுகளில்நூல்களை வெளியிட்டுத் தமிழாய்வுப் பணிகளைச் சீரிய வகையில் நிறுவனம் செய்து வருகிறது. நிறுவனத்தால் வெளியிடப்படும் நூல்கள் இலக்கணம், இலக்கியம், தமிழாய்வு, மொழிபெயர்ப்பு, தமிழ் மருத்துவம், காலக்கணிதம் ஆகிய

---

பொருண்மைகளில் அமைந்துள்ளன. இதுவரை 1262 நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. 1329 நூல்கள் வெளியீட்டிற்கு அணியமாக உள்ளன.

## 5.10 தமிழியல் – ஆய்விதழ்

50 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளில் காலாண்டு ஆய்வு இதழாக நிறுவனத்தால் வெளியிடப்படும் 'தமிழியல் – Journal of Tamil Studies (JOTS)' இதுவரை 111 இதழ்களாக வெளிவந்துள்ளன. இதில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு தமிழறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல் மதிப்புரைகள், நிறுவன வெளியீடுகளின் அறிமுகம் ஆகியவை இடம்பெறுகின்றன. பொதுமக்கள் மற்றும் ஆய்வாளர்களின் பயன்பாட்டிற்காக இதுவரை வெளிவந்துள்ள அனைத்துத் தமிழியல் இதழ்களும் நிறுவன வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 5.11 ஆய்வு நூலகம்

1970ஆம் ஆண்டு சுமார் 100 நூல்களுடன் தொடங்கப்பட்ட இந்நூலகம் தற்பொழுது 2.30 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் சுமார் 1.30 இலட்சம் நூல்களுடன் இயங்கிவருகிறது. ஆய்வுப் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள இந்நூலகம் பெரிதும் பயன்படுகிறது. கல்வியாளர்கள், ஆய்வாளர்கள்,

---

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார் மேல்நிற்கும் புகழ். குறள் **232**

ஆய்வு மாணவர்கள், இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்குப் பயில்வோர், அயல்நாட்டவர் போன்றோர் இந்நூலகத்தால் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

## 5.12. ஆய்வுப் பட்ட வகுப்புகள்

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக ஏற்புடன் நிறுவனத்தில் முழுநேர மற்றும் பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 239 மாணவர்கள் முனைவர் பட்டமும், 375 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர். 2021–22ஆம் ஆண்டில் 5 மாணவர்கள் முனைவர் பட்ட வகுப்பிலும் 13 மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்பிலும் பயின்று வருகின்றனர்.

## 5.13 முதுகலை பட்டப்படிப்புகள்

2018ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தமிழ் முதுகலைப்பட்ட வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. இவ்வகுப்பில் 2021–2022ஆம் ஆண்டில் முதலாமாண்டில் 12 மாணவர்களும் இரண்டாமாண்டில் 13 மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.

---

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. குறள் **234**

2019ஆம் கல்வியாண்டு முதல் ஒருங்கிணைந்த முதுகலை 5 ஆண்டுகாலப் படிப்பினைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன் தொடங்கி நடத்தப்பட்டுவருகிறது. இவ்வாண்டு மொத்தம் 11 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

## 5.14 பட்டய வகுப்புகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சார்பில் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பும், திருக்குறள் ஓவியக்காட்சிக்கூடம் ஒருங்கிணைப்புடன் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் ஓர் ஆண்டுப் பட்டயப் படிப்பும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், ஆய்விருக்கைகளின் வாயிலாகத் திருமந்திரமும் வாழ்வியலும், திருவாசகமும் வாழ்வியலும், செம்பொருட்டுணிவு ஆகிய பட்டய வகுப்புகளும் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. 2021–22ஆம் ஆண்டில் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பில் 43 மாணவர்களும், 2022ஆம் ஆண்டில் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டயப் படிப்பில் 207 மாணவர்களும், திருமந்திரமும் வாழ்வியலும் வகுப்பில் 120 மாணவர்களும், செம்பொருட்டுணிவில் 20 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

---

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். குறள் **238**

## 5.15 விரிவுரையாளர் / ஆராய்ச்சிக்கான தகுதித்தேர்வுகள் பயிற்சி

பல்கலைக்கழக நல்கைக்குழுவால் நடத்தப்பெறும் விரிவுரையாளர் / ஆராய்ச்சியாளர் தகுதித் தேர்வுக்கான சிறப்புப்பயிற்சிவகுப்புகள்நிறுவனத்தில்கட்டணமின்றி ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. இவ்வகுப்பில் நிறுவன மாணவர்கள் மட்டுமின்றிப் பிற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களும் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர். இதுவரை 450 மாணவர்கள் இவ்வகுப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

## 6. நல்கை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் செலவினங்களுக்குத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நல்கை வழங்கி வருகிறது. 2021-2022ஆம் நிதியாண்டில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நல்கை விவரம் பின்வருமாறு :

| | |
|---|---|
| வாலாய நல்கை | ரூ. 2,96,69,000 |
| ஓய்வூதியம் (ம) ஓய்வுகாலப் பணப்பலன்கள் | ரூ. 1,02,44,000 |
| **மொத்தம்** | **ரூ. 3,99,13,000** |

---

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்; பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. குறள் **241**

## 7 முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் நூல் வெளியீடு

முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் முதல் நூலாக அயல்நாட்டு அறிஞர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் எழுதிய "A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages" என்னும் நூல் பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் கூட்டு வெளியீடாக வரப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.2.2022 அன்று வெளியிடப்பட்டது.

## 8 நிகழ்த்தப்பட்ட தமிழாய்வுப் பணிகள்

- "கி.ரா.வின் படைப்புலகமும் படைப்பு மொழியும்" என்னும் பொருண்மையில் 25.05.2021 முதல் 29.05.2021 முடிய 5 நாட்கள் பயிலரங்கம் இணையவழி நடத்தப்பட்டது.
- "பன்முக ஆளுமையாளர் கலைஞர்" என்னும் பொருண்மையில் 16.06.2021 முதல் 01.07.2021 முடிய 16 நாட்கள் இணையவழி பன்னாட்டு கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

---

நல்லாற்றாள் நாடி அருளாள்க; பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை. குறள் **242**

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்க முழுமுதற் காரணமாகயிருந்த, மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் 15.09.2021 அன்று ரூ. 50 ஆயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவனர் நாள் விழா கொண்டாடப்பட்டது.
- உலக மொழிபெயர்ப்பு நாளான 30.09.2021 அன்று ரூ.20 ஆயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவனத்தில் மொழிபெயர்ப்பு நாள் விழா கொண்டாடப்பட்டது.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட நாளான 21.10.1970–ஐ சிறப்பிக்கும் வகையில் 21.10.2021 அன்று ரூ.20 ஆயிரம் அரசு நிதியுதவியுடன் நிறுவன நாள் விழா கொண்டாடப்பட்டது.

## 9 தற்பொழுது நடைபெற்றுவரும் பெருந்திட்டப்பணிகள்

- பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமையைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசால் "பாரதியின் கையெழுத்துப் பிரதிகள் தேடித் தொகுக்கப்பட்டு அவை வடிவம் மாறாமல் செம்பதிப்பாக வெளியிடுதல்,பாரதியின் வாழ்வைச் சிறுவர்கள் அறியும் வண்ணம் சித்திரக் கதை

---

மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. குறள் **244**

நூலாகவும்,பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தேர்வு செய்து தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஓவியர்களின் வண்ண ஓவியங்களுடன் நூல் ஒன்றாகவும் வெளியிடுதல் மற்றும் பாரதியாரின் படைப்புகள் மற்றும் பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுதல் ஆகிய பொருண்மைகளில் அமைந்த பெருந்திட்டப்பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தின் கீழ், பிறநாட்டு இலக்கியங்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து நிறுவனம் மூலமாக அச்சிட்டு வெளியிடுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.
- சங்க இலக்கியநூல்களைச் சந்திபிரித்து எளிமைப் பதிப்பாக வெளியிடுதல் மற்றும் தமிழ் செவ்வியல் இலக்கிய நூல்களை உரையுடன் தொகுத்து வெளியிடுதல் மற்றும் திராவிடக் களஞ்சியம் எனும் தொகுப்பு நூலையும் தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழகம் மூலம் உருவாக்கி நூல் அச்சாக்கப் பணி நிறுவனத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ளது.

---

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. குறள் **247**

## இயல் - 5

## தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

### 1 முகவுரை

*அகமென்றும் புறமென்றும் வாழ்வை*
*அழகாக வகுத்தளித்து*
*ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனியமொழி*
*ஓதி வளரும் உயிரான உலக மொழி*
*நம் மொழி – அதுவே நம் தமிழ்மொழி*

என்று வாழ்நாள் மூச்சாகத் தமிழின் பெருமையைப் பறைசாற்றிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வாக்கிற்கு ஏற்ப, உயிரோடும் உணர்வோடும் கலந்த தமிழுக்கென்று உருவாக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம் உலகத் தமிழர்களின் அடையாளமாக விளங்கி வருகிறது. தமிழை உலகெங்கும் பரவச் செய்யும் அரும் பணியை இப்பல்கலைக்கழகம் செவ்வனே செய்துவருகிறது.

### 2 தோற்றம்

தஞ்சையில் உள்ள பெரியகோயில் உலகத் தமிழர்களின் பெருமை. தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழரின், தமிழ்மொழியின் பெருமை. இத்தகைய பெருமை கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகம்

---

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை; அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. குறள் 252

1981ஆம் ஆண்டு, திராவிடத் தமிழர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15இல் தோற்றுவிக்கப்பட்டது. இது பசுமைமிகு 825 ஏக்கர் பரப்பளவில் 43,868.34 ச.மீ. கட்டடப் பரப்பளவில் அமைந்துள்ளது. 'த','மி','ழ்','நா','டு' என்ற தமிழ் எழுத்துக்கள் வடிவில் கட்டடங்கள் கட்டப்பெற்றுள்ளன. தமிழ்மொழி ஆராய்ச்சிக்கென உருவாக்கப்பெற்ற இப்பல்கலைக்கழகம் 41 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளது. கலைப் புலம், சுவடிப் புலம், மொழிப் புலம், வளர்தமிழ்ப் புலம், அறிவியல் புலம் ஆகிய ஐந்து புலங்களில் 26 துறைகளை உள்ளடக்கி உயராய்விலும் தமிழ் வளர்ச்சிப் பணியிலும் ஈடுபட்டு வருகிறது இப்பல்கலைக்கழகம். மரபுக்கலைகளைப் பயிற்றுவிப்பதற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் திறந்தவெளி அரங்கத்துடன் கூடிய கூத்துக்களரி கட்டடம் கட்டப்பெற்றுள்ளது. இவற்றுடன் அருங்காட்சியகம், அச்சகம், பதிப்புத்துறை, நூலகம், தமிழ்ப் பண்பாட்டு மையம், தமிழ் வளர்மையம் மற்றும் சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம் போன்ற திட்டப் பிரிவுகள் வழியாகவும் இப்பல்கலைக்கழகம் சிறப்பாக இயங்கிக்கொண்டு வருகிறது.

---

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்னூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம். குறள் **253**

## 3 குறிக்கோள்கள்

❖ உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்குத் தமிழின் தொன்மையான இலக்கண இலக்கியங்களையும், தமிழ்ப் பண்பாட்டையும் கொண்டுசேர்த்தல்;

❖ கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை, கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை செய்துவரும் அகழாய்வுகளின் வழியாகப் பண்டைத் தமிழர்களின் வரலாற்று உண்மைகளைக் கண்டறிதல்;

❖ தமிழர்களின் மரபான சித்தமருத்துவ முறையின் வழியாகத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறையின் புறநோயாளர் பிரிவு வழி மக்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குதல்;

❖ தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பொதிந்து கிடக்கும் மரபுசார் அறிவியல் அறிவையும் தொழில்நுட்பங்களையும் ஆய்வுகளின் வழியே மீட்டுருவாக்கம் செய்தல்;

❖ பழந்தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் மொழிபெயர்த்து வழங்குதல்;

---

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு. குறள் **255**

❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள ஓலைச்சுவடிகளையும் அரிய கையெழுத்துச்சுவடிகளையும் மரபுசார் முறைகளில் பாதுகாத்து, அவற்றைச் செம்மையான முறைகளில் பதிப்பித்து வெளியிடுதல்;

❖ தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்களைத் தலைசிறந்த ஆய்வு மாணவர்களாக உருவாக்கிப் பல நாடுகளில் பணிசெய்ய ஊக்குவித்தல்;

## 4 எதிர்காலத் திட்டங்கள்

❖ புலம்பெயர் தமிழர்களுக்கான தமிழ் ஆய்வு மையம் உருவாக்குதல்;

❖ முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழி உயராய்வு மையத்தை மேம்படுத்துதல்;

## 5 மாணவர்கள் நேரடி சேர்க்கை விவரம்

2021–2022ஆம் கல்வியாண்டில், முதுநிலைப் பட்டப் படிப்பில் 116 மாணவர்களும் ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டப் படிப்பில் 100 மாணவர்களும் இளங்கல்வியியல் பட்டப் படிப்பில் 98 மாணவர்களும் கல்வியியல் நிறைஞர் பட்டப் படிப்பில் 2 மாணவர்களும் ஆய்வியல் நிறைஞர் படிப்பில் 52

---

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில். குறள் **256**

மாணவர்களும் சேர்க்கை பெற்றுள்ளனர். தற்போது பல்கலைக்கழக மாணவர் எண்ணிக்கை, முனைவர் பட்ட மாணவர்கள் உள்பட 1042 ஆக உள்ளது. 2022–2023ஆம் கல்வியாண்டிற்கான சேர்க்கை அறிவிப்பு வெளியிடப்பட உள்ளது.

## 6 உதவித்தொகை வழங்கிய விவரம்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2021–2022ஆம் ஆண்டில்பயின்றபட்டியல்இனத்தவர்/பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை தமிழக அரசின் உரிய துறைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2021–2022ஆம் கல்வியாண்டில் பயின்ற மாணவர்களுக்கு ரூ.57,53,368/– கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழ்க்காணும் பட்டியலில் உள்ளது.

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபின புதிய மாணவர்களுக்கு | 17,53,331 |

---

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின். குறள் **257**

| வ. எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 2 | பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் மாணவர்களுக்கு (புதுப்பித்தல்) | 3,79,345 |
| 3 | பட்டியல் இனப் புதிய மாணவர்களுக்கு | 15,78,357 |
| 4 | பட்டியல் இன மாணவர்கள் (புதுப்பித்தல்) | 12,32,335 |
| 5 | முதுகலைத் தமிழ், ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுகலைத் தமிழ் பயிலும் மாணவர்களுக்கான உதவித் தொகை திங்கள் தோறும் ரூ.2000/– ஒன்பது மாதங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | 8,10,000 |
| | **கூடுதல்** | 57,53,368 |

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. குறள் **259**

## 7 செயல்பாடுகள்

தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளோடு பெருந்திட்ட / குறுந்திட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

- ஓலைச்சுவடிகளைப் பராமரித்துப் பாதுகாக்கப் புதுதில்லி தேசியச் சுவடிகள் இயக்ககம் (National Mission for Manuscripts) என்ற ஒன்றிய அரசு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுத் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

- ஓலைச் சுவடித்துறையும் இலண்டன் பிரிட்டிஷ் நூலகமும் இணைந்து "தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடிகளை மின்னணுமயமாக்குதல், பட்டியலிடுதல், பாதுகாத்தல்" (Digitization, Cataloging and Preservation of Palmleaf Manuscripts in the Tamil University) எனும் அருகிவரும் ஆவணக்காப்பகத் திட்டம் (EAP– Endangered Archives Project) தொடர்ந்து நடைபெற்று வருகிறது

- தமிழ்ப் பல்கலைக்கழகத் தொழில் மற்றும் நில அறிவியல் துறையில் ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகம் அனுமதித்துள்ள நல்கையுடன் "பூம்புகார் நகர மின்மயமாக்கம்"

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம் குறள் 263

("Digital–Poompuhar" Network Project on Digital Reconstruction of underwater Heritage site–Poompuhar) என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

➢ 2021–22ஆம் ஆண்டில் 44 கல்வியாளர்களுக்குப் பல்கலைக்கழகத்திற்கு எவ்வித நிதிச் செலவின்றிக் குறுகியகால ஆய்வுத்திட்டம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

➢ தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள 70 அறக்கட்டளைகள் மூலம் கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

➢ 2021–22 ஆம் ஆண்டில் நா.சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை (தொகை 5.00 இலட்சம்) மற்றும் தென்னை விஞ்ஞானி டாக்டர் வா.செ. செல்வம் அறக்கட்டளை – (தொகை 10.00 இலட்சம்) உருவாக்கப்பட்டுள்ளன.

➢ சித்த மருத்துவத் துறை பேராசிரியர்களைக் கொண்டு பொது மக்களுக்குப் பல்வேறு நோய்களுக்கு மருத்துவ ஆலோசனையும் வழங்கப்பெறுகிறது.

---

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். குறள் **265**

➢ தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் 1,89,454 நூல்கள் உள்ளன. இவற்றை மாணவர்கள், ஆய்வாளர்கள்,பொதுமக்கள்பயன்படுத்திவருகின்றனர்.

## 8 நடைபெற்றுவரும் திட்டங்கள்

### 8.1 வ.உ.சிதம்பரனார் இணையவழி கருத்தரங்கம் நடத்துதல்

தமிழ் நாடு அரசு நடத்திவரும் விடுதலை வீரர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150 வது பிறந்த நாள் விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கு 17.03.2022 முதல் 15.04.2022 வரை நடைபெற்றது. இக்கருத்தரங்கை நடத்துவதற்கு ரூ.2,00,000/–க்கான நிதி நல்கை வழங்கப்பட்டுள்ளது.

### 8.2 தமிழ் இலக்கியங்கள் உலக மொழிகளில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடுதல்

தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிடுவதற்கு ரூ.12.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நல்கை வழங்கப்பட்டுள்ளது. மூன்று தமிழறிஞர்களைக் கொண்ட வல்லுநர் குழு அமைக்கப்பட்டு முதற்கட்டக் குழுக்கூட்டம் 01.03.2022 அன்று நடைபெற்றது.

---

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. குறள் **267**

இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் சங்கத்தமிழ் நூல் பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்காக இறுதி செய்யப்பட்டுத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

## 8.3 ஒலி நூல்களாக (Audio Books) வெளியிடுதல் திட்டம்

பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்கள் ஒலி நூல்களாக (Audio Books) வெளியிடப்படும். இதற்கெனத் ரூபாய் 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழந்தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் சிறார் இலக்கியங்களை ஒலி நூல்களாக்குவதற்கு (Audio Books) நூல்களைத் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 8.4 தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் ஆய்விருக்கை

தமிழறிஞர் இராபர்ட் கால்டுவெல் தமிழ் ஆய்விருக்கையில் ஓய்வுபெற்ற மொழியியல்துறை பேராசிரியர், ஆய்வறிஞராக நியமிக்கப்பட்டு, "அறிஞர் இராபர்ட் கால்டுவெல்லுக்குப்பின் திராவிட

---

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. குறள் **269**

மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வுகள்" எனும் தலைப்பில் ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு வருகிறார். இவ்வாய்விருக்கையின்வழி இணையவழிக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றுக் கருத்தரங்க மலர் வெளியிடப்பெற்றுள்ளது.

## 8.5 தமிழ்ப் பண்பாட்டு மையம் / தமிழ் வளர் மையம்

தமிழ்ப் பண்பாட்டு மையத்தின்வழி இசை, பரதநாட்டியம் மற்றும் மரபுக்கலைகளுக்குரிய சான்றிதழ் வகுப்புகள் நடத்துவதற்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இதுவரை 40 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பெற்றுள்ளன. இவ்வாண்டு புதிதாக 5 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பெற்று, இணையவழியில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இது வரை இம்மையத்தில் 1820 மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

தமிழ் வளர்மையத்தின் வழி தமிழ்மொழி சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகள் இணையவழி நடத்துவதற்கு ஐந்து உள்நாடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பெற்றுள்ளது. இவ்வாண்டு மூன்று புதிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பெற்றுள்ளது. இது வரை இம்மையத்தில் 300 மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர்.

---

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். குறள் **270**

## 8.6. சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம்

சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம் அமைக்கப்பெற்றுத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சிற்பக்கலையில் பட்டயம் மற்றும் சான்றிதழ் வகுப்புகள் நடைபெற்றுவருகின்றன. இது வரை இம்மையத்தில் 20 மாணவர்கள் சேர்க்கப் பெற்றுள்ளனர்.

## 8.7 நூல்கள் மறுபதிப்பு

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீட்டு நூல்கள் அரசு அச்சகத்தின்வழி மறுபதிப்பு செய்வதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இது வரை 274 நூல்கள் வருடியாக்கம் செய்யப்பட்டு அச்சிடும் நிலையில் உள்ளன.

---

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. குறள் **273**

## இயல் – 6
## உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

### 1 தோற்றம்

தமிழர்களின் அடையாளமான தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் அகிலமெங்கும் அறியச் செய்யும் வகையில் உலகத் தமிழர்களையும் மற்றும் உலகத் தமிழ் அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஒரு குடையின் கீழ்க் கொண்டு வருவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு உலகத் தமிழ்ச் சங்கம் 1986இல் தொடங்கப்பெற்று சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

உலகத் தமிழ்ச் சங்கக் கட்டட வளாகத்தில் இரண்டு கூட்ட அரங்குகள், நிருவாகப்பிரிவு, ஆய்வுப்பிரிவு, நூலகம், வகுப்பறைகள், கருத்தரங்க அறை, நிருவாகக்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்ட அரங்கம், 400 பேர் அமரக்கூடிய வகையில் கலையரங்கம், விருந்தினர் தங்கும் அறைகள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன. கட்டடத்திற்கு முன்பக்கச் சுற்றுச்சுவரில் திருக்குறள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பதிக்கப்பட்டுள்ளன. தமிழறிஞர்களும் ஆய்வுமாணவர்களும் பயன்பெறும் வகையில் 55,000க்கும் மேற்பட்ட நூல்களுடனும் குளிர்சாதன

---

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. குறள் **274**

வசதியுடனும் நூலகம் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் நாள்தோறும் நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் ஐயன் திருவள்ளுவர் சிலை முகப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு நடைபெறுகின்ற இலக்கியக் கருத்தரங்க நிகழ்வுகளில் அயல்நாட்டு தமிழறிஞர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்தோடு கலந்துகொண்டு பயனடைகின்றனர்.

## 2 சங்க அமைப்பு நோக்கம்

❖ தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் செயலாற்றி வரும் தமிழ் அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள், ஆய்வு மையங்கள் முதலியவற்றின் விவரங்களைத் தொகுத்துப் பதிவு செய்தல்.

❖ அயலகத்தில் வாழ்ந்து வரும் தமிழர்களின் வாழ்வியலையும் இலக்கியப் பணிகளையும் தொகுத்தல், ஆவணப்படுத்துதல்.

---

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். குறள் **278**

❖ அயலகத் தமிழர்களின் பங்களிப்பையும் தொண்டினையும் வெளிக்கொணரும் வகையில் அயலகத் தமிழர் குறித்த தகவல் களஞ்சியம் தயாரித்து வெளியிடுதல்.

❖ உலக நாடுகளுக்கெல்லாம் தமிழர்களின் இலக்கியம்,பண்பாடு,தமிழ்மொழிபற்றியசெய்திகளைக் கொண்டு செல்லுதல்.

❖ அமெரிக்கா,கனடா,அரபுநாடுகள்,அயர்லாந்து, டென்மார்க், பிரெஞ்சு கயானா, பிரான்சு, ஆசுதிரேலியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, பிஜி, மொரிசியசு, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டு அடிப்படையிலான உதவிகளை அளித்தல்.

❖ பழந்தமிழ் இலக்கியங்களையும் தமிழரின் தனித்த பண்பாட்டு அடையாளங்களையும் அயலகத் தமிழர்கள் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை இணையவழியில் உருவாக்கித் தருதல்.

❖ புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்களின் வாழ்வியலையும் தனித்துவத்தையும் தாயக மக்கள் அறிந்து தெளிய இணையவழியில் வாய்ப்புகளை வழங்குதல்.

---

கணைகொடிது; யாழ்கோடு செவ்விது; ஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல். குறள் **279**

❖ தமிழர்கள் அதிகம் வாழும் உலக நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் தாய்மொழி பற்றிய ஆராய்ச்சி மையம், இருக்கைகளை அமைக்கும் பணிகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

## 3 சங்கத் தமிழரைக் கண்முன் நிறுத்தும் சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம்

'தமிழ்நிலை பெற்ற தாங்கரும் மரபின் மகிழ்நனை மறுகின்மதுரையும்வறிதே'புறநானூற்றுபாடலுக்கேற்பப் பேறு பெற்ற மதுரையில் சங்கத் தமிழரின் காதல், வீரம், அறத்தின் பாற்பட்ட வாழ்க்கை முறைகளை எடுத்துரைக்கும் சங்க இலக்கியப் பாடல் காட்சிகளை இன்றைய தலைமுறையினரும் உலகினரும் அறிந்து தெளியும் வண்ணம் காட்சி படுத்தியுள்ளனர்.

சங்கத் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை உணர்ந்துகொள்ளும்வகையில்ஓவியங்கள்,சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள், கற்சிற்பங்கள், பழந்தமிழர் வாழ்வியல் பற்றிய கல்வெட்டுகள், புகைப்படங்கள் எனக் கலைப்பொருள்களைத் தன்னகத்தே கொண்டு சங்கத் தமிழ் காட்சிக்கூடம் அமையப் பெற்றுள்ளது.

---

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. குறள் **281**

## 4. தமிழ்க்கூடல்

'நெடுநீர் மலிபுனல் நீள் மாடக் கூடல்' பரிபாடல் வரிக்கேற்பத் தமிழோடு தமிழ்க்கூடல் இணைந்து செயலாற்றுகிறது. உலகத் தமிழ்ச் சங்கத்தில் சங்கக் கால இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை தமிழாய்ந்து பேசும் அறிஞர்கள் ஒன்று கூடும் நிகழ்வு வாரந்தோறும் 'தமிழ்க்கூடல்' என்னும் பெயரில் இணையவழியில் நடத்தப்பட்டு வந்ததோடு மார்ச்சுத் திங்களிலிருந்து அரங்கத்தில் நடந்தேறி வருகின்றது.

## 5 உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் நிகழ்வுகள்

பொது முடக்கக் காலத்திலும் உலகத் தமிழ்ச் சங்கத்தின்பணிகள்தொய்வின்றித்தொடரும்வகையில் மலேசியா, ஆசுதிரேலியா, சிங்கப்பூர், அயர்லாந்து, இலங்கை, கொரியா, கனடா, இங்கிலாந்து, ஓமன், துபாய், இந்தோனேசியா, வியட்நாம், கம்போடியா, நார்வே, பிரான்சு, டென்மார்க், ஜெர்மனி, இங்கிலாந்து, ஹாங்காங் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள், தமிழறிஞர்களுடன் இணைந்து 200க்கும் மேற்பட்ட நாள்கள் இணையவழி நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் 17 ஆய்வரங்கங்கள்,

---

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். குறள் **283**

61 இணையத் தமிழ்க்கூடல்கள், 16 பன்னாட்டு கருத்தரங்கங்கள், 11 தேசியக் கருத்தரங்கங்கள், 12 பன்னாட்டு திறன்வழிப் பயிலரங்கங்கள், 15 பன்னாட்டு கவியரங்கங்கள், 14 சிறப்புப் பன்னாட்டு உரையரங்கங்கள், 13 சிறப்பு சொற்பொழிவுகள் ஆகிய இணையவழி நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

## 6 நூல் அரங்கேற்றம்

சீர்மிகு மதுரையம்பதியில் அமைந்துள்ள உலகத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் வகையில் தமிழில் சிறந்த படைப்புகளைப் படைக்கும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளைத் தரமான நூல்களைத் திங்கள்தோறும் அரங்கேற்றம் செய்யும் பணியினை மேற்கொண்டு வருகிறது. 215 நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 7 அயலகத் தமிழறிஞர்களுக்கு மகுடம் சூட்டும் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்

இலக்கணம், இலக்கியம், மொழியியல் என்ற மூன்று விருதுகள் உலகத் தமிழ்ச் சங்க விருதுகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

---

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். குறள் **284**

## 8 தமிழறிஞர்கள் தமிழ் ஆர்வலர்களிடையே நல்லுறவு

தமிழறிஞர்களுடனும் தமிழ் ஆர்வலர்களுடனும் ஒரு தமிழ் சார்ந்த நல்லுறவை உருவாக்கும் வண்ணம் உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர்கள் நாள்தோறும் சேர்க்கப்பட்டு வருகின்றனர். உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் இதுநாள் வரை 2385க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 9 வளரும் அறக்கட்டளைகள் மூலம் இலக்கியப்பணி

உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஐந்து அறக்கட்டளைகளான,

❖ சீனக்கவிஞர் யூசி – திருக்குறள் அறக்கட்டளை

❖ முனைவர் த.தங்கமணி – திருக்குறள் அறிவியல் நிறுவன அறக்கட்டளை

❖ சிந்தனைக் கவிஞர் கவிதாசன் – நூறப்பதிப்புச் செம்மல் வைரவன் அறக்கட்டளை

❖ ஆஸ்திரேலியா, சிட்னி தமிழ்க் கலை மற்றும் பண்பாட்டு கழக அறக்கட்டளை

---

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர். குறள் **286**

❖ சிங்கப்பூர் முனைவர் ஆ.ரா.சிவகுமாரன் – தேன்மொழி அறக்கட்டளை

நிறுவப்பட்டு ஆண்டுதோறும் சொற்பொழிவுகள் நடத்தப்பெற்று வருகின்றன.

## 10 புலம்பெயர் தமிழர்களின் படைப்புகள்

அயலகத்தில் வாழும் தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புகளைத் தமிழகத் தமிழறிஞர்கள், ஆய்வு மாணவர்கள் கற்றுப் பயன்பெறுமாறும் அவர்களது ஆய்வுகளுக்கு உறுதுணையாகவும் அயல்நாடுகளில் வாழும் தமிழர்களின் படைப்புகளைப் புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை மற்றும் நாடகங்கள் எனப் பிரித்துத் தொகுத்துக் களஞ்சியமாக வெளியிடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நூல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## 11 அயலகத் தமிழர்களின் கருத்துப்பரிமாற்றம்

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்களின் படைப்புத்திறனை வெளிப்படுத்த, கருத்துப் பரிமாற்றத்திற்காக இதழ்களைத் தோற்றுவித்துக் கொள்கின்றனர். தமிழர்கள் குடியேறி வாழ்ந்து வரும் நாடுகளில் வெளியாகும் இதழ்கள், மின்னிதழ்களைக்

கண்டறிந்து வரிசைப்படுத்தி ஆவணப்படுத்தும் பணிகள் உலகத் தமிழ்ச் சங்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 12 அறிவுத்திறன் பெற நூல் விற்பனை

உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற கருத்தரங்குகளின் கட்டுரைகள் தொகுத்து நூலாக்கம் செய்யப்பட்டுள்ளன. அதில் 27 நூல்கள் தற்போது விலை நிருணயம் செய்யப்பட்டு விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. உலகத் தமிழ் அமைப்பு தொகுதி-2 அச்சாக்கப் பணியிலுள்ளது. இணையவழிக் கருத்தரங்க ஆய்வுக்கோவை மற்றும் 'பாரெங்கும் பாரதி' இணைய வழிக்கட்டுரைகள் தொகுக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு வருகை தருபவர்கள் நூல்களை வாங்குவதற்கு ஏதுவாகத் தகவல் மையத்தில் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பெற்றுள்ளன.

## 13 உலகத்தமிழ் பன்னாட்டு மின் ஆய்விதழ்

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை உலகெங்கும் பரவி வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் இலக்கினை அடையும் பயணத்தில் ஒரு கருவியாக 'உலகத்தமிழ்'

---

பொய்ம்மையும் வாய்மை யிடத்த, புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். குறள் **292**

பன்னாட்டு மின் ஆய்விதழ் காலாண்டிற்கொருமுறை வெளியிடப்பெற்று வருகிறது. இதுநாள் வரை 15 காலாண்டிதழ்கள் வெளிவந்துள்ளன.

**உலகத் தமிழமைப்புகளின் விவரம் :**

உலகத் தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினராக இணைந்துள்ள 252 தமிழ்ச் சங்கங்களின் விவரங்கள் உலகத் தமிழ்ச் சங்க வலைத்தளத்தில் (utsmdu.org) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

---

## இயல் -7

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (Central Institute of Classical Tamil) தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மத்தியக் கல்வி அமைச்சகத்தின் மொழிப் பிரிவின் கீழ்ச் செயல்பட்டுவரும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் 2004ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் நாள் தமிழ் மொழியைச் செம்மொழியாக மத்திய அரசு அறிவித்தப்பின்னர் ஏற்படுத்தப்பட்டதாகும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்காக, சென்னை பெரும்பாக்கத்தில் தமிழக அரசால் வழங்கப்பட்ட (16.58 ஏக்கர்) இடத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு மத்திய அரசு 24,65,47,000/– ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகள் அனைத்தும் முடிவடைந்து 2022 ஜனவரி 12ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களால் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். ஆட்சிக்குழு

---

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. குறள் **299**

நிதிக்குழு மற்றும் கல்விக்குழுவால் நிறுவனத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் கி.பி. 600–க்கு முந்தைய காலத்தைச் செவ்வியல் காலமாகக் கொண்டு பண்டைத் தமிழ்ச் சமூகம் பற்றிய ஆய்வை நிகழ்த்தும் வகையில் செயல்பட்டு வருகிறது. பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் எல்லாக் கூறுகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாப்பதை இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழின் தொன்மை, தனித்தன்மை, தமிழர்களின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் சிறப்புகளைக் கவனத்தில் கொண்டு பின்வருவனவற்றை முதன்மையான குறிக்கோளாக இந்நிறுவனம் கொண்டுள்ளது.

❖ இந்தியப் பண்பாட்டின் பன்முக இயல்பு பற்றியும், இந்தியப் பண்பாட்டிலும், மரபிலும் தமிழியக் கூறுகளின் பங்களிப்புப் பற்றியும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கு ஊக்கமளித்து மேம்படுத்துதல்.

❖ பல்துறை சார்ந்த அறிஞர்களை ஒருங்கிணைத்துத் தமிழின் தொன்மை குறித்து ஆராய்தல்.

---

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். குறள் **437**

❖ தமிழ் பிற திராவிட மொழிகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்தல்.

❖ திராவிட மொழிகளின் வரலாற்று ஒப்பாய்வையும், வரலாற்று முறையில் தமிழ் வழக்காறுகள் குறித்த ஆய்வையும் மேற்கொள்ளுதல்.

❖ 41 செவ்வியல் தமிழ் நூல்களையும் உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடுதல்.

❖ செவ்வியல் காலத்திற்குட்பட்ட 41 நூல்களையும் சுவடிகள், பழம்பதிப்புகள், உரைமேற்கோள்கள் கொண்டு ஒப்பிட்டு மரபுவழி மூலபாடச் செம்பதிப்புகளை உருவாக்குதல்.

❖ முதுகலை, முனைவர், முனைவர் பட்ட மேலாய்வு உள்ளிட்ட பட்டப் படிப்புகளில் செம்மொழித் தமிழைக் கற்கவும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பை உருவாக்குதல்.

❖ கல்வி நிறுவனங்களிடமிருந்தும், தனிநபர்களிடமிருந்தும் செம்மொழித் தமிழாய்வு தொடர்பாகப் பெறப்படும் ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல்.

---

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை, நயவற்க
நன்றி பயவா வினை. குறள் **439**

❖ செம்மொழித் தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் தேசிய, பன்னாட்டு கருத்தரங்குகள், பயிலரங்குகள், பணியரங்குகளை நடத்துதல்; தகுதி வாய்ந்த கல்வி நிறுவனங்களுக்கு அவற்றை நடத்துவதற்குத் தேவையான நிதியுதவி அளித்தல்.

❖ செம்மொழித் தமிழின் சிறப்புகளை வெளிப்படுத்தும் ஆய்வு நூல்களைப் பதிப்பிக்க உதவி செய்தல்.

❖ செம்மொழித் தமிழில் முனைவர் பட்டமும், முனைவர் பட்ட மேலாய்வும் மேற்கொள்வோருக்கு உதவித்தொகை வழங்குதல்.

❖ செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு நல்கியோர்க்கு விருதுகள் வழங்கிச் சிறப்பு செய்தல்.

❖ செம்மொழித்தமிழ்க்கல்வியைஇந்தியாவிலும் அயல்நாட்டிலும் மேம்படுத்துதல்.

❖ செவ்வியல் நூல்கள் சார்ந்த பழஞ்சுவடிகளையும் பதிப்புகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்தல்.

---

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மை யுளெல்லாந் தலை. குறள் **444**

❖ தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பயின்றுவரும் மொழியாட்சியைப் புரிந்து கொள்ளுதல், விளக்குதல், நயம் பாராட்டுதல் ஆகிய திறன்களைக் கற்போர் அடைய உதவுதல் என்பதனை நோக்கமாகக் கொண்டு இணையவழிச் செம்மொழிக் கல்வித் திட்டத்தை நிறைவேற்றுதல்.

❖ 41 செவ்வியல் நூல்களுக்கான தரவகம் உருவாக்குதல், இலக்கண, இலக்கியக் கல்வி, இயற்கை மொழி ஆகியவற்றிற்குப் பயன்படும் மென்பொருள்களை உருவாக்குதல்.

❖ செம்மொழித் தமிழ் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் வழங்கும் மையமாகச் செயல்படுதல்.

**சாதனைகள்**

❖ பல்வேறு சங்க இலக்கிய நூல்கள், பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

❖ திருக்குறள் பல்வேறு உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுகின்றன. அவ்வகையில், திருக்குறள்: ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், மணிப்புரி, குஜராத்தி, பஞ்சாபி, இந்தி, சமஸ்கிருதம், ஒடியா, உருது, அரபு, மலையாளம், மராத்தி, வாக்ரிபோலி, நேபாளி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

---

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். குறள் **446**

❖ பல்வேறு பன்னாட்டு மற்றும் தேசியக் கருத்தரங்குகள் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்பட்டுள்ளன.

❖ தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, கீழ்க்கணக்கு நூல்கள் ஆகிய நூல்கள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

❖ சங்க இலக்கியம் முழுவதும் கன்னட மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

❖ தொல்காப்பியம் இந்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

❖ இறையனார் களவியல், ஐங்குறுநூறு ஆகிய நூல்கள் செம்பதிப்புகளாக வெளியிடப்பட்டுள்ளன.

❖ 257 முனைவர் பட்ட மாணவர்களுக்கும் 41 முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.

❖ திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்தில் செம்மொழித் தமிழ் பயிலும் மாணவர்களுக்குத் திங்கள்தோறும் ரூ. 3000/- உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

---

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். குறள் **448**

❖ செம்மொழிப் பயிலரங்குகள் (22 பயிலரங்குகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன)

## செம்மொழித் தமிழாய்வு நிறுவன விருதுகள்

❖ இந்திய அறிஞர் ஒருவருக்கு ரூபாய் 5 இலட்சம், பரிசுத் தொகையுடன் தொல்காப்பியர் விருது வழங்கப்படுகிறது.

❖ வெளிநாட்டினர் ஒருவருக்கும், வெளிநாடுவாழ் இந்தியர் ஒருவருக்கும் ரூபாய் 5 இலட்சம் பரிசுத் தொகையுடன் குறள்பீட விருதுகள் வழங்கப்படுகின்றன.

❖ இளந்தமிழர் விருது பெறும் ஒருவருக்கு ரூபாய் ஒரு இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

## கலைஞர் மு . கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை

❖ செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008ஆம் ஆண்டு ரூபாய் 1 கோடி வைப்புத் தொகையுடன் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட்டளை நிறுவப்பட்டது.

---

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். குறள் **450**

❖ இவ்வறக்கட்டளையின் மூலம் செம்மொழித் தமிழுக்குக் குறிப்பிட்ட வரைமுறைகளின் கீழ்த் தொண்டாற்றிய தமிழறிஞருக்கு ஆண்டுதோறும் பத்து இலட்சம்பரிசுத்தொகையுடன்கலைஞர்மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்கப்படும். 2010ஆம் ஆண்டுமுதல் 2019ஆம் ஆண்டு வரையிலான விருதுகள் 22.01.2022ஆம் நாளன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

## செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்

❖ மணிமேகலை மொழிபெயர்ப்புத் திட்டம் (20 மொழிகள்)

❖ தொல்காப்பியம் மொழிபெயர்ப்புத் திட்டம் (20 மொழிகள்)

❖ திருக்குறள் மொழிபெயர்ப்புத் திட்டம் (86 மொழிகள்)

❖ செவ்விலக்கிய நூல்களின் மொழிபெயர்ப்புத் திட்டம் (5 மொழிகள்)

❖ புகழும், புலமையும் வாய்ந்த பேராசிரியர்களைக் கொண்டு செவ்விலக்கியச்சிறப்புகளைக்காட்சிப்படுத்தி வலையொளி (YouTube) மூலம் பரவச்செய்யும் திட்டம்

---

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி; இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல். குறள் **453**

❖ புகழ்பெற்ற வெளிநாட்டு பல்கலைக்கழங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் அமைக்கும் திட்டம்

❖ பார்வை மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் 41 தமிழ்ச் செவ்வியல் நூல்களையும் சந்தி பிரித்து எளிய உரையுடன் பிரெய்லி நூல்களாக வெளியிடும் திட்டம்

❖ இணைவழிச் செம்மொழித் தமிழ்க் கல்வித் திட்டம்.

❖ பன்னாட்டு ஆய்விதழ் திட்டம்

❖ உலகளாவிய மொழிகளைத் தமிழ் மொழியுடன் ஒப்பிட்டு ஒப்பியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் திட்டம்.

❖ பன்னாட்டு அளவிலான கருத்தரங்கங்கள் நடத்தும் திட்டம்.

---

மனநலம் மன்னுயிர்க் காக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும். குறள் **457**

## இயல் -8

# தமிழ் வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

❖ உலகியலின் இயல்புகளை மாற்றுவதுதான் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்காகும். நாம் வாழும் உலகம் (Planet), செழுமையை (Prosperity) நோக்கி அமைதியோடு (Peaceful), கூட்டாண்மை (Partnership) மனப்பாங்குடன் முன்னேறிச் செல்லும் மக்கட் கூட்டம் (People) ஆகிய ஐந்து கூறுகளின் ஒருங்கிணைந்த வடிவமாகும். அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய சமூகம் தொடங்கி, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளுதல் வரை; உணவுப் பாதுகாப்பு தொடங்கி, போராட்டங்களுக்குப் பின்னர் சமூகங்களை மீண்டும் கட்டமைப்பது வரை; வாழ்நாள் முழுவதும் கற்றல் தொடங்கி, வலுவான நிறுவனங்களை உருவாக்குவது வரையிலான உலகளாவிய இலட்சியங்களை தேசிய அளவிலும், மாநில அளவிலும் மாற்றத்திற்கான பாலமாகப் பண்பாடு விளங்குகிறது.முதன்முறையாக தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை உலகளாவிய நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்ப் பண்பாட்டின் செழுமையைப் பறைசாற்றுவதற்கும் முனைப்பான பல திட்டங்களைச்

---

செயலாற்றி வரும் தமிழ் வளர்ச்சித் துறையானது, தற்போது நீடித்த நிலையான வளர்ச்சித் திட்ட இலக்குகளை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியுள்ளது.

❖ இந்த இலக்கு, 2030 ஆம் ஆண்டிற்குள் எய்தப்பட வேண்டுமென்றும், நீடித்த வளர்ச்சி மற்றும் நெடிய வாழ்க்கை முறை, மனித உரிமைகள், பாலின சமத்துவம், ஆகியவற்றுக்கான கல்வி வாயிலாக, நீடித்த நிலையான வளர்ச்சியை மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறமைகளைக் கற்போர் அனைவரும் பெறுதல், உலக அமைதி மற்றும் இன்னா செய்யாமை, உலகக் குடிமக்கட் தன்மையை எய்துதல் ஆகியவற்றை ஊக்குவித்தல், பன்முகப் பண்பாட்டுக் கூறுகளையும், நீடித்த நிலையான வளர்ச்சிக்கு பண்பாட்டின் பங்களிப்பையும் போற்றுதல் ஆகியவை உறுதிசெய்யப்படவேண்டுமென்றும்,நீடித்தநிலையான வளர்ச்சிக்கான இலக்கு 4.7 எதிர்நோக்குகிறது.

இவ்வகையில், முனைப்பான பயிற்சிப் பட்டறைகள், திறன் மேம்பாட்டு வகுப்புகள், தமிழ்க் கல்வி சார்ந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு வாயிலாக தமிழின் பன்முகத் தகைமை, கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றை இந்திய நாட்டில் மட்டுமின்றி உலகெங்கும் பரப்புவதைத் தலையாய நோக்கமாக இத்துறை கொண்டுள்ளது.

---

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். குறள் **463**

**நிறைவுரை:**

*எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்*
*எழுவர் பூண்ட ஈகை செந்நுகம்*
*விரிகடல் வேலி வியலகம் விளங்க*
*ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள் (111–115)*

எனும் சிறுபாணாற்றுப்படை பாடலில் நல்லியக்கோடன் பெயர் நிலைத்தார் போல, தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தக்காருக்கு விருதுகள், பரிசுகள் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு சிந்தனையின் அடிப்படையில் தமிழ் வளர்ச்சித் துறை, மொழிபெயர்ப்புத் துறை, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் உலகத் தமிழ்ச் சங்கம் ஆகியவை தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்பத் திட்டங்களைச் செயற்படுத்தி உலகெங்கும் உள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கும் வகையில் செயலாற்றிவருகிறது.

---

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. குறள் **465**

# வரவு – செலவுத் திட்ட மதிப்பீடு
# 2022–2023

| வ. எண் | துறை | 2022–2023 வரவு – செலவு மதிப்பீடு (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| 1 | தமிழ் வளர்ச்சித் துறை தலைமைச் செயலகம் | 11,86,00 |
| 2 | தமிழ் வளர்ச்சி இயக்ககம் | 28,56,98 |
| 3 | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் | 4,41,47 |
| 4 | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை | 5,74,96 |
| 5 | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | 30,80,37 |
| 6 | உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை | 1,45,75 |
| **மொத்தம்** | | **82,85,53** |

**தங்கம் தென்னரசு**

தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப்பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்

---

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மோடு
கொள்ளாத கொள்ளாது உலகு. குறள் **470**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.11.2021 ஆம் நாளன்று எல்லைப் போராட்டத் தியாகிகளைச் சிறப்பிக்கும் வகையில் 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டமைக்கு அவர்தம் மரபுரிமையருக்கு 08.12.2021 ஆம் நாளன்று நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10.12.2021 ஆம் நாளன்று பாரதி நினைவு நூற்றாண்டு விருது வழங்கிய நிகழ்வு.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.12.2021 ஆம் நாளன்று திருக்குறள் முற்றோதல் செய்த மாணவர்களுக்கு குறள் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.01.2022 ஆம் நாளன்று வல்லுவர் கோட்டத்தில் உள்ள திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி சிறப்பித்தல்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.01.2022 ஆம் நாளன்று வள்ளுவர் கோட்டத்தில் குறளோவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கிய நிகழ்வு.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.01.2022 ஆம் நாளன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்ட நிகழ்வு.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.01.2022 ஆம் நாளன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய நூல்கள் வெளியிட்டமை.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 22.01.2022 ஆம் நாளன்று தமிழறிஞர்களுக்கு கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள் வழங்கப்பட்டன.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.03.2022 ஆம் நாளன்று தமிழறிஞர்களுக்குத் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கப்பட்ட நிகழ்வு.